உலைகொதிக்க, *inf.* To boil as water when placed on the fire for cooking, &c.

உலைக்களம், *s.* A smith's forge, கொல்லனுலையிடம்.

உலைக்குறடு, *s.* A smith's tongs, இரும்பெடுக்குங்குறடு.

உலைத்தண்ணீர்—உலைநீர், *s.* Water set over the fire for cooking, பாகஞ்செய்யவைக்குந்தண்ணீர். 2. Water used by the smith in the work of the forge, இரும்புதோய்க்குநீர்.

உலைத்துருத்தி, *s.* A smith's bellows, உலையூதுந்துருத்தி.

உலைமுகம், *s.* A smith's furnace or the centre of the forge, கொல்லனுலையிடம்.

உலைமூக்கு, *s.* The hole in the forge in which the bellows are inserted, கொல்லனுலைநாசி.

உலைமூடி, *s.* The cover of a pot used for heating water, உலைப்பானையின்மேல்மூடி.

ஊரைவாயமூடவுலைமூடியில்லை. There is no lid that will cover the country.

உலைமூட்ட, *inf.* To construct a forge and make it ready for work, கொல்லனுலையாயத்தம்பண்ண. 2. To make a fire in the smith's forge, கொல்லனுலையில்நெருப்புமூட்ட. 3. To make a fire for cooking, அடுப்புமூட்ட.

உலைமூட்டினுலகுநிலைக்கும். If the smith construct the forge, the world will stand.

உலையாணிக்கோல், *s.* A smith's poker, beak-iron, உலையிருப்புக்கோல். 2. A branding-iron, சூடுகோல்.

உலையில்வெந்தவிரும்பு, *s.* Iron well burnt in a smith's forge.

உலையேற்ற—உலைவைக்க, *inf.* To set a pot on the fire, உலைப்பானையையடுப்பிலேவைக்க.

அவனென்றலைக்குஉலைவைக்கிறான். He puts a rice-pot on the fire for my head; i. e. he meditates my ruin.

இன்னமுலைவைக்கவில்லை. The rice-pot has not yet been set on the fire.

உலை, கிறேன், ந்தேன், [*vul.*] ஞ்சேன், வேன், ய, *v. n.* To become loose—as a tooth, a peg, a stake, &c., அலைய. 2. To be disordered—as one's affairs, become deranged, unsettled, to be ruined in circumstances, கெட. 3. To become ruined—as a house, furniture, land, crops, &c., சிதைய. 4. To become unsettled, or agitated in mind, to be troubled, to waver, fluctuate, மனங்கலங்க. 5. To be put to the rout—as an army, கலைய. 6. To degenerate in morals, or character, ஒழுக்கங்கெட. 7. To flag, grow languid, to cease, to be reduced in strength, to lose one's powers, பலங்குறைய. (*c.*)

அந்தக்குடியுலைந்துபோயிற்று. That family is ruined.

உலைந்தபழம், *s.* An over-ripe fruit.

உலைந்தமனம், *s.* A fluctuating mind.

உலைந்துதிரிய, *inf.* To wander, roam.

உலையாமுயற்சி, *s.* Untiring exertion.

உலைவு, *v. noun.* Tremor, trembling, நடுக்கம். 2. Trouble, vexation, agitation, derangement, &c., அலைவு. 3. Rout, discomfiture, கெடுதி. 4. Ruin, destruction, அழிவு. 5. Fear, horror, அச்சம்.

உலைவுபண்ண, *inf.* To annoy, trouble, perplex, vex.

உலை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To harass, vex, agitate one—as a demon; to distress as a fever, &c., அலைக்க. 2. To ruin, injure, impoverish, reduce, or emaciate one—as a disease, கெடுக்க. 3. To disorder, derange one's circumstances, to upsettle, கலைக்க. 4. To ruin by seduction, desertion, &c., to injure another's character, ruin a person, a family, &c., சிதைக்க. 5. To put to the rout, discomfit, முறியடிக்க. 6. To cause the mind to fluctuate, மனதைக்கலக்க. 7. To ruin property—as a house, furniture, lands, &c., ஆஸ்திநிலைக்கெடுக்க.

பேயவனையுலைத்துப்போட்டது. The demon has vexed, ruined, reduced him, &c.

உலைப்பு, *v. noun.* Putting to the rout, discomfiture, முறியடிக்கை. 2. Trouble, vexation, suffering, &c., வருத்தம்.

உலைசல், *s.* [*a corruption of* உலைதல்.] Disordered state of circumstances, trouble, vexation, ruined state of a house, furniture, &c., derangement, கெடுதல்.

உலைச்சல், *s.* [*a corruption of* உலைத்தல்.] Trouble, vexation, agitation, harassing, suffering, derangement, fluctuation, &c., அலைதல்.

அதிலேயுலைச்சல்மெத்த. There is much trouble in that affair.

உலைச்சற்பட, *inf.* To be troubled, harassed, disordered, ruined, &c.

உலைச்சற்படுத்த, *inf.* To trouble, harass, derange, ruin, &c.

உலையிற்பிணைந்தின்னி, *s.* One of the one-hundred-and-twenty kinds of ore, மாமிசபேதி.

உலொங்கு, கிறேன், உலொங்கினேன், வேன், உலொங்க, *v. n.* (*Tel.* లొంగు.) To be humble, submissive, கீழ்ப்படிந்திருக்க.

உலொங்காதவன், *s.* A man who ceases to ask favors.

உலொடலொடெனல்—உலொடலொடெனப்பிடல், *v. noun.* [*vul.*] Making a harsh and coarse noise—a sign of great noise, அங்கைபொலிக்குறிப்பு.

உலொடலொட்டைப்பேச்சு, *s.* Vain or useless prattling.

உலொடலொட்டையாயிருக்க, *inf.* To be broken, to be vain or useless.

உலொடுக்கு, *s.* Emptiness, want of solidity, வெறுமை. 2. A noise made in walking from weakness, ஒலிக்குறிப்பு.

உலொடுக்குலொடுக்கெனவோடுகிறது. To make a noise in running—as when a horse gallops.

உலொடுக்குவிழுந்துபோகிறது. To fall in, decay.

உலொட்டி, *s.* (*Tel.* లొట్టి.) Intoxicating liquor, வெறிதருமதுவகை. 2. A small earthen pot attached to a palm tree to receive its juice, கள்ளுக்குவளை.

அவன்பணமெல்லாமுலொட்டியிற்போடுகிறான்.... He lavishes all his money in liquor.

உலொட்டிக்காரன்—உலொட்டிகுடிக்கிறவன்—உலொட்டிமுகுசி, *s.* A drunkard.

*உலோகம், *s.* The world, the earth, any of the fabulous worlds of Hindu mythology, உலகம். 2. Worldliness, earthliness, secularity, உலகத்தக்கதேத்தன்மை. Wils. p. 723 LOKA. 3. Metal—as iron, &c. Five simple metals are given in the native lexicons—gold, silver, copper, iron, and lead or tin, பஞ்சலோகம். Wils. p. 725. LOHA. To these are sometimes added two mixed metals—as வெண்கலம், a mixture of copper and tin, making bell-metal, &c., and பித், a compound of copper and zinc, or pinchbeck, &c.

உலோகக்கட்டி, *s.* A mass of metal composed of the five kinds in equal proportions, பஞ்சலோகக்கட்டி. (சிக.)

உலோகதாது, *s.* A kind of arsenic, தத்தபாஷாணம்.

உலோகபற்பம், *s.* [*as* அயவெள்ளை.] Iron reduced to a medicinal powder.

உலோகபாலன், *s.* A king, அரசன். Wils. p. 724. LOKAPALA.

உலோகபேதம், *s.* Difference, or variety of worlds—one of the six kinds of பேதம்; which see.

உலோகமணல், *s.* Iron-sand.

உலோகமலை, *s.* A mountain of metals.

உலோகரட்சகன், *s.* A preserver or protector of the world, உலகத்தைக்காப்பவன். 2. An appellative of Vishnu—as preserver, விட்டுணு.

உலோகராட்டு, *s.* The Sovereign of the world; i. e God, கடவுள்.

உலோகரூடம், *s.* Custom or fashion of the world, உலகவழக்கம்.

உலோகாதியந்தம், s. The beginning and end of the world.

உலோகாதீதம், s. That which transcends the world, which is supermundane.

உலோகார்த்தம், s. Secular advantages, இலௌகீகசுகம். 2. Benefit to the world, public good, உலகத்தாருக்குவரு சுகம்.

உலோகோத்தரம், s. Excellence, elegance, that which is liked by every one.

உலோகோயம், s. The tract of country lying south of the Himalaya and north of Ramisseram, இமையமலைக்கு மிராமேசரத்துக்குமிடையேயுள்ளதேசம்.

பஞ்சலோகம், s. The five simple metals. See உலோகம், 3.

சத்தலோகம், s. The seven metals. See உலோகம், 3.

*உலோகிதம், s. Red, சிவப்பு. Wils. p. 726. LOHITA.

*உலோசனம், s. Eye, கண்; [ex லோச, to see.] Wils. p. 724. LOCHANA. (p.)

சலசலோசனன், s. Vishnu the lotus-eyed. (p.)

பாலலோசனன், s. Siva the frontal-eyed. (p.)

*உலோசி, s. The பேய்ப்பசளை plant. See பசளை.

*உலோசிதம், s. The sandal tree, சந்தனமரம், Santalum album, L. (p.)

*உலோபம், s. Penuriousness, stinginess, close-fistedness, illiberality, ஈயாமை. 2. (p) Covetousness, intense or greedy desire, cupidity, avarice, பொருளாசை. Wils. p 725. LOB'HA. 3. [in grammar.] Elision of a letter, &c., தொகுத்தல்விகாரம். 4. Want, destitution, குறைவு. This is given as one of the six moral evils. See பகை. Wils. p. 724. LOPA.

யாகத்தைத்திரவியலோபமில்லாமற்செய்துமுடித்தார்கள். They performed the sacrifice without lack of money.

உலோபத்தனம்—உலோபத்துவம், s. Penuriousness, cupidity, &c.

உலோபத்துவமாய்ச்செய்ய, inf. To perform a ceremony illiberally or meanly.

உலோபன், s. A niggard, a stingy person, a miser, பிசுனன்.

உலோபி, s. (mas. and fem.) An avaricious person, an extremely covetous person. Wils. p 725. LOB'HIN.

மத்தியலோபம், s. Elision of a letter in the middle of a word.

*உலோமம், s. A tail, a hairy tail, வால். (p.) 2. The end or tip of a tail, வாலுனி; [ex லு, to cut.] Wils. p. 725. LOMA.

*உலோலம், s. Shaking, tremulousness, அசைவு. 2. Fondness, desire, cupidity, ஆசைப்பெருக்கம். Wils. p. 725. LOLA.

உலோலன், s. A lustful, lewd, lecherous man, ஸ்திரீலோலன்.

சங்கீதலோலன், s. One passionately fond of music.

ஸ்திரீலோலன், s. A lascivious man.

*உலோலிதம், s. Shaking, tremulousness, trembling, அசைவு Wils p. 725 LOLITA

உலோலிதமுகம், s. The head inclining to one side—as in deep thought, a pensive countenance, சிந்தையாலொருதோளின்மேற்சாயந்திருக்குமுகம். (சது.)

உல்—உல்லு, s [prov.] A sharp stick, or iron to peel cocoanuts, தேங்காயுரிக்குங்கருவி. 2. A stick for impaling, கழு.

உல்லேற்ற, inf. To impale, கழுவேற்ற.

உல்கு, s. Toll, custom, duty, tax, ஆயம். (p.)

*உல்லங்கனம்—உல்லிங்கனம், s. Exceeding, transgressing, passing over, கடக்கை. Wils. p. 163. ULLANGANA. 2 Disgrace, reproach, அவமதிப்பு. 3. Contempt, நிந்தை. (p)

உல்லங்கனப்பட, inf. To be dishonored, to be ashamed.

சபையிலேயுல்லங்கனப்பட்டான். He has been dishonored in the assembly.

உல்லம், s. The sable fish, shad, ஓர்மீன் (c.)

உள்ளத்தைவிற்றுஉல்லத்தைக்கொள். Sell what you have and buy sable fish. [prov.]

உல்லங்கருவாடு, s. The salted sable fish.

கடலுல்லம், s. A kind of sable fish.

ஆற்றுல்லம், s. Another kind of the same.

உல்லரி, s. A shoot, a bud, தளிர் (இரேவணு.)

*உல்லாசம், s. Joy, pleasure, happiness, மகிழ்ச்சி. 2. Conviviality, gaiety, சரசக்களிப்பு. 3. Festivity, internal joy, gladness, உள்ளக்களிப்பு. 4. Self-consequence, pride, இறுமாப்பு. 5. (p.) Light, splendor, தேசு. Wils. p. 164. ULLASA. 6. A shawl, an upper garment thrown over the shoulder, அத்தவாளம். (உப. 390.)

உல்லாசக்காரன்—உல்லாசன், s. One that diverts himself, one who lives in pleasure.

உல்லாசநடை, s. A proud, stately gait, gentlemanly bearing.

உல்லாசப்படுத்த, inf. To entertain.

இவன்அவனையுல்லாசப்படுத்துகிறான். He entertains him.

உல்லாசப்பேச்சு, s. Pleasantry, humorsomeness.

உல்லாசமாய்ப்போக, inf. To take a walk for recreation,

உல்லாசம்பண்ண, inf. To take recreation, to divert, to amuse one's self by walking, sporting, &c.

உல்லாசவபிநயம், s. Humorous gestures.

*உல்லாபம், s. Babble, prattle, stammering, imperfect utterance—as of foreigners, children, birds; the delicate prattle of females, மழலைமொழி. 2. Change of voice by sickness, நலிந்தமொழி. Wils. p. 164. ULLAPA. (p.)

உல்லாபன், s. A convalescent person, நோயுற்றெழுந்தோன். (p.)

உல்லியர், s. Persons superstitiously thought to be skilled in determining the places for digging wells, கூவநூலோர். (p.)

*உல்லேகம், s. Utterance, pronunciation, உச்சரிப்பு. Wils p. 164. ULLEKA. 2. (p.) A figure in Rhetoric, ஓரலங்காரம்.

*உல்லோசம், s. (St) An awning, a canopy, மேற்கட்டி. Wils. p. 164. ULLOCHA.

*உல்லோலம், s. A large wave, surge, billow, கடற்பெருந்திரை. Wils. p. 164. ULLOLA. (p.)

உவ, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, v. a. To be pleased with, to approve of, to like, விரும்ப. 2. v. n. To be glad of, to rejoice in, to be delighted with, மகிழ 3. [vul.] To be pleasing, agreeable, இன்பமாயிருக்க.

அவருக்குவந்தசெய்கை. A thing pleasing to him.

உலகுவப்பச்செய்தல். Acting so that the world may be pleased with it— (நாலடி.)

காய்தலுவத்தலகற்றி. Free from anger and partiality. (அறநெறிச்.)

உவப்பு, v. noun. Joy, delight, pleasure, gladness, மகிழ்ச்சி. 2. (p.) Height, உயரம். 3. Expanding, blooming, swelling —as பொலிவு. 4. Gratification, பிரியம். 5. Play, amusement, &c., விளையாட்டு.

உவப்பின்மை, s. Unpleasantness.

உவருலம், s. The three myrobalans, or medical fruits used in preparing Indian medicines. See திரிபலை.

உவகை, s. Joy, gladness, delight, mirth, hilarity, jubilation, களிப்பு. 2. Approbation, complacency, fondness, love, பிரியம். (p.)

உவகைச்சொல், s. Kind and polite address to a visitor, congratulation to a new-married couple, &c.

உவகைப்பறை, s. The mode of beating drums on festive occasions

உவக்காண், adv. At that time, அப்பொழுது. 2. There, in that place, அவ்விடம். (குறள்.) (p.)

உவக்காணெங்காதலர்செல்வார். Lately when my husband left me—

உவச்சர், s. A low tribe of Mohammedans, சோனகர். 2 A caste of drummers at temples, ஓச்சர். (p)

உவட்டி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v n. [prov. improp. உவட்டு.] To nauseate, loathe.

உவட்டி—உவட்டிப்பு, v. noun. Nauseating, loathing, heaving.

உவட்டிற்கூர்மை, s. One of the one-hundred-and-twenty kinds of ore, வர்மிசபேதி.

உவட்டு, கிறேன், உவட்டினேன், வேன், உவட்ட, v. n. To nauseate, loathe, வெறுக்க. 2 To overflow, pour forth—as a water-fall, fountain, &c., to flow—as the head of the tide, பிரவாகிக்க 3. To rise— as the surf, பெருக்கெடுக்க.

உவட்டியுந்திதிரைப்புனல். The overflowing rushing wave. (ஸ்காந்.)

நெஞ்சையுவட்ட, *inf.* To feel nausea, to loathe, to be sea-sick.

உவட்டு, *v. noun.* Nausea, குமட்டுகை. 2 Increasing, flowing out—as from a fountain, பெருக்கு

உவட்டெடுத்தொழுகும். (The Ganges) swells and flows onward.

உவணம், *s.* Height, உயரம். 2. Garuda the brahmany kite, கருடன். 3. An eagle, கழுகு. 4. A kite, பருந்து. (*p.*)

உவணகேதனன்—உவணமுயர்த்தோன், *s* Vishnu, விட்டுணு (*p*)

உவணன், *s.* The brahmany kite, the vehicle and flag of Vishnu, Garuda, கருடன். (*p.*)

உவணி, *s.* A sword, வாள். (*p.*)

உவணை, *s.* Swerga, சுவர்க்கம். 2. *adv* In that place, உவ்விடம். (*p*)

உவண், *adv.* There, in that place, உவ்விடம் (*p*)

*உவதி, *s.* A young woman, one from sixteen to thirty, தருணி. (Sans வதி.) See உவா. Wils. p. 687 UVATI in UVAN. (*p*)

*உவதை, *s.* A mountain torrent, மலையினவீழருவி. (*p.*)

*உவமம், *s.* Comparison, simile, resemblance—as உவமை. Wils. p. 156. UPAMA. (*p.*)

உவமவுருபு—உவமையுருபு, *s.* A particle of comparison, ஒப்புருபு—as அன்ன, போல, &c. (*p.*)

உவமாதீவகம், *s.* A figure in Rhetoric in which the comparison applied to one of a series is understood of the others, உவமைவிளக்கணி.

உவமாநிலம், *s.* A wall, சுவர். (சது.)

*உவமானம், *s.* The object of comparison—as உபமானம். Wils. p. 156. UPAMANA.

உவமானசங்கிரகம், *s.* A treatise descriptive of the various kinds of comparison.

உவமானப்பிரமாணம், *s.* [*in* அளவை.] One of the eight அளவை, the law of ascertainment from resemblance, comparison, simile, &c

உவமானிக்க, *inf.* To liken, compare, உவமானஞ்செய்ய.

*உவமேயம், *s.* The thing compared. See உபமேயம். Wils. p. 156. UPAMAYA.

உவமேயப்பொருள், *s.* That which is to be compared—as, தாமரைமுகம், a lotus-like face.

*உவமை, *s.* Comparison, simile, similitude, உவமாலங்காரம். 2. [*in the scripture translations.*] A parable. The common rhetoric gives twenty-four varieties of உவமை, the simplest form is by supplying terms expressive of similitude—as, சந்திரனபோன்றமுகம், a moon-like face. Wils. p. 156. UPAMA.

உவமைசொல்ல, *inf.* To compare.

உவமைத்தொகை—தொகையுவமை, *s.* The omission of the sign of comparison—as மதிமுகம for மதிபோன்றமுகம்.

உவமையகத்திணை, *s.* The rule for illustrating a doctrine by metaphors.

உவமையாகுபெயர், *s.* [*in rhetoric.*] A kind of metaphor—as when it is said, குயிலவந்தாள, meaning thereby a female thus compared to that sweet-noted bird.

உவமையாய்ச்சொல்ல, *inf.* To speak allegorically, figuratively.

உவமையின்மை, *s.* Incomparableness—as அதுலம

உவமிக்க, *inf.* To liken, compare, to examine the relations things bear to each other, உவமானஞ்செய்ய.

உவமிப்பு, *v. noun.* Comparison, comparing, ஒப்பிடுகை.

*உவராகம், *s.* The time of an eclipse, கிரகணகாலம். (சேது) See உபராகம். Wils. p. 157. UPARAGA. (*p.*)

உவரி, *s.* The ocean, கடல். 2. Urine, சிறுநீர்; [*ex* உவர், salt.] (*p.*)

உவர், *s.* Saltishness, brackishness, harshness, astringency, the taste of any kind of salt, acid, or alkaline substance, உவரப்பு. 2. Sea, ocean, கடல. 3. Salt, உப்பு

உவராயிருக்க, *inf.* To be saltish, brackish.

உவர்க்கடல், *s.* Sea of salt-water.

உவர்க்களம், *s.* Salt-pans, land where salt is formed, உப்பளம். 2. Brackish land, உவர்நிலம்.

உவர்க்காரம், *s.* Soap, சவுக்காரம்.

உவர்த்தரை—உவர்நிலம், *s.* Brackish, sterile land, உப்புநிலம். 2. Land where salt forms either naturally or by art, உப்புவிளையுநிலம்.

உவர்நீர், *s.* Salt-water, sea-water, brackish water, brine, &c., உப்புச்சலம்.

உவர்மண், *s.* Brackish soil, உவர்நிலம். 2. Fuller's earth, an impure carbonate of soda, the nitre of the Bible, உழமண்.

உவர், க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To taste salt or brackish, உப்புக்கரிக்க. 2. To taste harsh, astringent, &c.—as any of the mineral salts, துவர்க்க. 3. To be unpleasant, disagreeable, &c., அரோசிக்க. 4. *v. a.* [*with personal terminations.*] To dislike, abhor, feel aversion to, வெறுக்க.

உவர், *v. noun.* Dislike, loathing, வெறுப்பு.

உவர்ப்பு, *v. noun.* Saltishness, brackishness, உப்புக்கரிப்பு. 2. Harshness (of taste), astringency, துவர்ப்பு. 3. (*p.*) Aversion, disgust, abhorrence, dislike, வெறுப்பு. 4. Insult, contempt, நிந்தை.—*Note.* உவர்ப்பு, சு. There are six unpleasant dispositions of men, viz.: 1. ஆசியம் or அவமதிச்சிரிப்பு, derision. 2. இரதி or போரசை, vehement desire. 3. அரதி or வெறுப்பு, dislike. 4. சோகம் or சோர்வு, swoon, delirium. 5. பயம் or அச்சம், fear. 6. குற்சை or அருவருப்பு, abhorrence.

உவர்ச்சங்கம், *s.* A shrub, முட்சங்கு, Monetia tetracantha, *L.*

உவளகம், *s.* The harem, or zenana, an interior part of a mansion appropriated to women, அந்தப்புரம். 2. A surrounding wall, a rampart, a fortification, மதில 3. One side, ஒருபக்கம். 4. A hollow, or hole in the ground, பள்ளம். 5. A tank, a lake, குளம். 6. Salt-pans, a place where salt forms, உப்பளம். 7. A village of herdsmen, இடைச்சேரி. 8. [*prop.* உகளம்.] Two, a pair, a couple, இரண்டு. (*p.*)

உவளம், *s.* Boiled rice, சோறு. 2. Fodder for elephants, &c., யானைக்கவளம். (*p.*)

உவளி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To cleanse, purify, சுத்தஞ்செய்ய. (*p.*)

உவளு—உவளா, கிறது, உவண்டது, உவளும், உவள, *v. n.* To be flexible, pliant, unable to support a weight—as a tender stalk. A lady's waist is thus poetically described as shaking or agitated in walking, to shake, wabble. See துவள. (*p*)

உவட்சி, *v. noun.* Shaking, moving, துவளுகை. (*p.*)

உவளுயம், *s.* A medical preparation, துவைத்தக்கட்டுமெருந்து.

உவனி, *s.* A sword, வாள். (*Rott.*)

உவனி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* [*prov.*] To grow moist or damp—as the ground, clothes, furniture, &c., when exposed to dew, damp, &c., சரிக்க.

உவனிப்பு, *v. noun.* Moistness, dampness, humidity, சரிப்பு.

உவன், *pron.* (*fem.* உவள், *pl* உவர்.) He, this man (intermediate), spoken of one between the speaker and a more distant person, சுட்டுச்சொல். See உ.

*உவா, *s.* A young man, also a person of virile age, from sixteen to seventy, யௌவனன். (சது) 2. A younger brother, இளையோன். 3. Youthfulness, being young, இளமை. Wils. p. 687. UVAN.

உவா, *s.* Fulness, abundance, plenitude, நிறைவு. 2. The full moon, பூரணை. 3. The sea, கடல. 4. An elephant, யானை. 5. The conjunction of the sun and moon, அமாவாசை. (சூ. 34.)

உவாகருமம், *s.* [*com.* உபாகருமம்.] Religious duties of brahmans at the time of the new and full moon.

உவாமதி, *s.* The full moon.

உவாவறுதி, *s.* The end of the new or full moon, when the eclipse is supposed to begin and religious duties are to be attended to, அமாவாசைபூரணையினமுடிவு.

உவாதி, *s.* Severe pain, &c.—as உபாதி; which see.

உவாத்தி—உவாத்தியாயன், *s.* (*hon.* உவாத்தியார், உவாத்தியார்.) A teacher of the Vedas, வேதமோதுவிப்போன். 2. A schoolmaster. See உபாத்தியாயன.

உவாத்திமார், *s.* Schoolmasters.

உவாத்திமைத்தொழில்பண்ணுதல், *v. noun.* Keeping a school.

உவாந்தம், *s.* New moon, conjunction, அமாவாசை 2. Full moon, or opposition, பூரணை.

உவாந்தி, *s.* [*prop.* வாந்தி.] Vomiting.

உவாய், s. A medicinal tree with edible fruit whose leaf is pendent, தூமம். (M. Dic)

உவாலம்பம்—உவாலம்பனம், s. Abuse, reviling, தூஷணை. (சைட.) Wils. p 161. UPALUMB'HA. (p.)

மன்மதோவாலம்பனம், s. Reviling Kama the god of love. (சைட.)

சந்திரோவாலம்பனம், s. Reviling the moon. (சைட.)

உவி, கிறது, ந்தது, யும், ய, v. n. [prov. prob a corruption of வீ] To boil away—as water in a pot of rice. 2. To die in great numbers—as in battle or by pestilence, &c, சாவ.

அம்மைபினால்வெகுஜனமுவிந்தபோயிற்று. A vast multitude of people has disappeared by the smallpox.

உவை—உவ், pron. These, those, intermediate, third pers. plu. அஃறிணை or inferior class of the demonstrative உ.

உவ்வி, s. Head, தலை. (p.)

உவ்வு, s. Religious austerities, penance, self-mortifications, தவம். (p.)

உழு, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, v. a. To practise, learn by practice, பழக. 2. To exert energy, use endeavors persevere, execute, முயல. 3. To labor, work hard, வேலைசெய்ய. 4. To follow any kind of business—as husbandry, merchandise, manufacture, &c, தொழில்நடத்த. 5 To discharge the duties of an office, உத்திபோகஞ்செய்ய. 6. To suffer, experience sorrow, pain, trouble, fatigue, &c.. வருந்த. 7. To undergo penance, தவநதிஜுட்டட. (சிலப் and குறள்.) (p)

இடருழக்குமவருத்தநீக்.. Removing from a state of affliction in which troubles are treasured up for future births— (இராமா.)

துயருழக்க, inf. To suffer pain, affliction, to endure agony.

உழப்பு, v. noun. Practice, habit, exercise, பழக்கம். 2. Energy, perseverance, close application, exertion, முயற்சி. 3. Manual labor, laborious employment, கைத்தொழில். 4. Impulse as of voice, force communicated, உயிர்முயற்சி. 5. Fatigue, suffering, வருத்தம். 6. Strength, வலி. (p.)

உழப்பாளி, s. An energetic, or industrious person, பிரயாசப்படுவோன்.

உழக்கு, s. A dry or liquid measure, quarter of a படி or measure—as கால்படி, marked thus ௐ.

உழக்காழாக்கு, s. Three-eighths of a measure, அரைவேலைக்கால், marked thus ௐ.

உழக்கு, கிறேன், உழக்கினேன், வே ன், உழக்க, v. n. To fence, சிலம்பம்பழக. (p.) 2 v. a. To trample, tread upon, mash, injure, devastate or destroy by treading, &c., மிதிக்க. 3. (p.) To disturb, foul, stir up with the feet, கலக்க.

செங்கண்மேதிகரும்புழக்கி. The red-eyed buffalo having trampled on the sugar-cane— (காசி.)

அமரிலுழக்கிலெல்லது. Unless they beat down the enemy in battle— (பார.)

உழக்கு, v. noun. Trampling, treading down, மிதிப்பு.

உழச்சியர், s. [prop. உழத்தியர்.] Females of the ploughman caste. See உழவர்.

உழப்பு, கிறேன், உழப்பினேன், வே ன், உழப்ப, v. a. To stir up, disconcert, embroil, mix all together, confuse, கலக்க.

உழப்பிப்போட்டாயகுறியைக்குழப்பிப்போட்டாய. You have deranged the calculation (in palmistry). (கல்லைக்குற)

உழப்பன், s. [prov.] A person who talks much and uses sophistry.

உழமண்—உவைழமண், s. [prop. உவர்மண்.] Fuller's earth.

உழம்பு, கிறேன், உழம்பினேன், வே ன், உழம்ப, v. n. To sound, make a noise, utter indistinct sounds, speak indistinctly, ஒலிக்க. (சூ.) (p.) 2. To be disturbed, to be disconcerted, be thrown into disorder, குழம்ப.

உழலு—உழல், கிறேன், உழன்றேன், வேன், உழல, v. n. To whirl, revolve, சுழல. 2. To play, be in motion, to swing as a door on its hinges, &c., ஆட. 3. To wander, roam, to be unsettled, be agitated, சுற்றித்திரிய. 4. To oscillate, vibrate, அசைய. 5. To waver, be anxious, to be vexed, worried, மனஞ்சுழல. 6. To be in a state of suffering and distress—as the soul in connexion with births, to revolve through various transmigrations, பிறவியிற்சுழல.

உழலாமனனும். An unwavering mind— (சைட.)

உழலுசல்போல. Like an agitated swing— (மறைசை.)

சமுசாரக்கவலைகொண்டுழலுகிறான். He is troubled with family cares.

ஒக்கவுழன்றான். He has labored or suffered together with another.

உழற்சி, v. noun. Whirling, revolving, turning, சுழற்சி. 2. Roaming, wandering, சுற்றித்திரிகை. 3. Oscillation, vibration, ஆடுகை. 4. Doubt, wavering, anxiety, agitation, fear, மனச்சுழற்சி. 5. Suffering, distress, வருத்தம். (p.)

உழன்றறுக்க, inf. To labor hard, strive with might and main. 2. To become skilled or dexterous by practice.

உழன்றி, s. A stick fastened under the cow's neck with a hole for the tether to play in.

உழன்றுகிடக்க, inf. To be loosened, to be useless.

உழன்றுவர, inf. To be tossed to and fro—as the soul in births, or as one in various cares and troubles; to grow tired, fatigued, faint.

உழலை, s. [vul.] Great thirst, தாகம. 2. A wooden cylinder in an oil or sugar-cane-press by the revolution of which the oil or juice is expressed, உழலைமரம். 3. A piece of wood with a hole for receiving the upper post of a door or gate. See கதவின்குமிழ்.

உழலைமரம், s. A log of wood suspended from the neck of a cow to prevent it from straying, தொண்டுக்கட்டை.

அருழலைப்படுதல், v. noun. Being scorched with great heat. 2. Being tormented with thirst.

உழவாரம்—உழவாரப்படை, s. A paddle for weeding or cutting grass, புற்செதுக்கி

உழற்றல், s. Thirst, தாகம். 2. Heat, வெப்பம். (c)

எனக்குத்தண்ணீருழற்றலாயிருக்கிறது. I thirst.

நாவுழற்றல், s. A parched tongue.

உழற்று, கிறேன், உழற்றினேன், வே ன், உழற்ற, v a. To twist, whirl any thing about, சுழற்ற. 2 To move about the arms, or legs through pain, கைகாலுழற்ற. 3. [prov.] To pass time tediously, to get through an irksome duty, காலத்தைவருத்தத்தோடெழிக்க 4. v n To writhe through pain, வருந்திப்புரள.

உழற்றிக்கழிக்க, inf. To pass in endurance.

பூணடவேலையையொருபடியுழற்றிக்கழித்துக்கொண்டேன். I have accomplished the unpleasant business in which I was engaged.

சமுசாரத்தையுழற்றிக்கழிக்க. To sustain with reluctance the cares, duties, &c. of a family.

உழற்றி, v. noun. Rolling, twisting, writhing with pain, distortion, சுழலுகை. 2. Great thirst, மிகுதாகம்.

கையுழற்றி, s. Spasms in the arms, contractions, waving, &c.

காலுழற்றி, s. Spasms in the leg, waving, &c.

நாவுழற்றி, s. Thirst.

நாவுழற்றியெடுக்க, inf. To suffer great thirst.

உழி, s. A place, site, இடம். 2. Side, பக்கம். 3. A particle of place, a form of the seventh case, ஏழனுருபு. (p.)

அவன்வந்துழி. Where he came—

நானடப்புழி. Where I shall walk—

மரபுழியுய்த்து. Conducting (him) with decorum—

என்னுழிவா. Come to me.

உழிஞை, s. A kind of cotton shrub, சிறுபூளை, Œrua lanatar, L. 2. A garland of that shrub worn by soldiers in storming a fort, அடைவெற்றிமாலையிஞெறை. (p.)

உழிதரல், v. noun. Moving about, going to and fro—as fishes in a pond, &c., being unsettled, unsteady, திரிதல். 2. Turning about, whirling, சுழலல்; [ex உழி, et தரல், giving.] (பாரதி.) (p.)

உழு—உழுவான், s. An insect which undermines the beds of gardens and the roots of trees, பின்னைப்பூச்சி.

உழு, கிறேன், தேன், வேன், உழ, v. a. To plough, எருழ. 2. [with the impersonal terminations.] To root up—as pigs, நிலத்தைக்கிளைக்க.

பன்றிநிலத்தையெல்லாமுழுதுபோட்டது. The hogs have ploughed up all the field

உழக்கோல், s. A goad used to drive oxen when ploughing.

உழத்தி, s. (plu. உழத்தியர்.) A female of the ploughman caste. See உழவர்.

உழத்திப்பாட்டு, s. A kind of poem. See பள்ளு.

உழுதகாடு, s. A ploughed highland.

உழுதநிலம், s. Ploughed land.

உழுதுண்பேரர், *s.* Those who cultivate fields belonging to others and subsist upon a share of the produce 2. The fourth or Vellale caste, வேளாளர்.

உழுதுண்டுவாழ்வாரேவாழ்வாரமற்றெல்லாந்தொழுதுண்டுபின்செல்பவர் Those who till the ground enjoy plenty and happiness, the rest being followers and servants of the great depend on their assistance. (குறள்)

தொழுதுண்சுவையிலுழுதுண்ணினிது. To cultivate ground and live by it is more satisfactory than to procure maintenance from others by serving them.

உழுதுபுழுதியாக்க, *inf.* To plough and harrow, to waste

உழுபடை, *s.* A plough, கலப்பை; [*ex* படை, implements]

உழுவலைப்பு, *s.* The turnings in ploughing, தொழுப்பு.

உழவு, *v. noun.* Ploughing, உழுகை. 2 (*fig.*) (*p.*) Agriculture, husbandry, tillage, பயிர்செய்யுந்தொழில்.

உழவினமிகுந்தவூதியமில்லை. There is no occupation which yields greater profit than agriculture.

உழவடைக்க, *inf.* To make over to another a piece of land for purposes of cultivation.

உழவர்—உழவோர், *s.* Ploughmen, cultivators, agriculturists, husbandmen, inhabitants of agricultural districts, மருதநிலமாக்கள். 2. The fourth or Vellale caste, வேளாளர். 3. (*p*) [*ex* உழப்பு.] Warriors, heroes, படைவீரர்.

உழவிடை, *s.* Cessation from ploughing.

உழவீரம், *s.* Condition of the ground when it is sufficiently moist to be ploughed.

உழவுகட்ட, *inf.* [*prov.*] To take the lead—as the first of several teams in ploughing, to mark the course, &c., முதற்சால்போக.

உழவுகட்டி, *s.* Clods in a ploughed field, உழுமபொழுதெழுமண்கட்டி.

உழவுகாலம், *s.* Ploughing season.

உழவுகுண்டை—உழவுமாடு—உழவெருது. Oxen trained to the plough.

உழவுகோல், *s.* A ploughman's rod or staff, an ox goad, தாற்றுக்கோல். 2. A horse whip, குதிரைச்சமட்டி.

உழவுகோல்கொண்டேர்ந்தனன். He drove (the horse) with a whip.

உழவுசால், *s.* A furrow, படைச்சால்.

உழவுசெய்ய, *inf.* To plough, practise agriculture, உழ.

உழவுத்தொழில், *s.* Ploughing, tillage, husbandry, பயிர்செய்யுந்தொழில்.

உழவுபொறுத்தமாடு, *s.* A powerful, well trained ox that works easily.

உழவுமழை, *s.* Rain that falls in the ploughing and sowing season.

உழுகை, *v. noun.* Ploughing, agriculture.

உழுநர், *s.* Ploughmen, உழவர்.

உழுந்து, *s.* A kind of grain, pulse, a bean, one of the nine kinds of grain, Phaseolus mungo. See தானியம், also written உளுந்து

உழுத்தமா, *s.* The flour of the உழுந்து

உழுத்தம்பருப்பு, *s.* The kernel of the உழுந்து

உழுவம், *s.* An ant, emmet, எறும்பு. (சது.) (*p.*)

உழுவல், *s.* Established usage, custom, natural rights, proper course of proceeding, முறைமை. 2. Kindness, affection, attachment persevered in from birth to birth, whether the transmigration be supernal, animal, or vegetable, one taking the same kind of birth as the other, and if one be male the other becomes a female, &c., or both may be of the same sex and they may be different animals, விடாததொடர்ந்தவன்பு 3. Quality, temper, disposition, as peculiar to or characteristic of a person or thing, குணம். (*p*)

உழுவை, *s.* A tiger, புலி. (*p.*)

வாடப்பசித்தவரிமுவைவாலாட்டி. The streaked tiger, faint with hunger, waved its tail—

உழை, *s.* Cerebral sounds—one of the seven musical tones, சிரந்தரபிறக்குமிசை 2. One of the strings of the lute, or guitar, or the tone of a lute, யாழ்நரம்பு. 3 A deer, a fawn, மான். 4. A place, இடம். 5. A form of the seventh case, ஏழனுருபு. 6. Side, பக்கம். (*p.*)

உழைநின்றீரும். You also who stood by—(கல்லா.)

எவ்வுழைச்செல்கினரும். Those who move in every place; i. e. all persons.

அவனுழைச்சென்றேன். I went to him.

உழையர்—உழையோர், *s.* Ministers of state, kings' counsellors, மந்திரிகள் 2. Servants, ஏவல்செய்வோர், [*ex* உழை, side.]

உழை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, வ *v. a* [*col. for* உழத்த] To earn, gain by labor, procure by industry, to acquire, வருந்திமீட்ட. 2. *v. n* To labor hard, toil, strive, drudge, ply, வேலைமிகுதியாய்ச்செய்ய 3 (*p.*) To sound—as talk, buzz, clamor, இரைய. 4. To suffer, endure hardships, to be afflicted, துன்பமுற.

கல்வியிலேமிகவுமுழைக்கிறான். He is very diligent and successful in study

நானுழைத்தவுடைமையிலேதினமிறேன். I live by my own earnings.

உழைத்தபுண்ணியம், *s.* Acquired merit.

உழைத்துக்கொடுக்க, *inf.* To labor for nothing, or in vain.

வயிற்றுக்குழைக்க, *inf.* To labor for one's maintenance. 2. To procure support by labor.

உழைப்பு, *v. noun.* Hand-labor, toil, industry, diligence, பிரயாசம். 2. Earnings, gain, profit of labor, toil, or industry, thriving, thriftiness, வருந்திமீட்டவை. 3. Endeavors, exertions, energy, close application, முயற்சி.

உழைப்பினவாராவுறுதிகளுளவோகழப்பினவாராக்கைபுறுவனவோ? Is there any good to be obtained without exertion? Is there any evil that may not arise from indolence?

அவருக்கிலக்கணத்திலேகல்வவுழைப்பு. His application and success in the study of belles-lettres are great.

உழைப்பாளி, *s.* An industrious, thrifty or laborious man, பிரயாசப்படுபவன்.

உழைப்பறிக்க, *inf.* To struggle, labor under difficulties 2. To wallow, roll in mire or any thing filthy.

உழைமண், *s.* See உழமண்.

உளகு, *s.* The shaft of a lute, யாழ்கோடு. (சேந்.) (*p.*)

உளப்படுதல், *v. noun.* Being agreeable, சம்மதித்தல். 2. Being included. See உட்படல்.

உளப்பாடு, *v. noun.* Being included, comprehended, உட்படுகை

உளப்பாட்டுத்தன்மைப்பன்மை, *s.* Verbs agreeing with nouns of the first and second persons, or with the three persons.

உளப்பாட்டுமுன்னிலை, *s.* Verbs agreeing with nouns of the second and third persons.

உளப்பாட்டுவினை, *s.* Verbs embracing or agreeing with any two, or all the three persons, பிறவிடத்தாரைத்தன்னோடுட்படுத்தவினை.

உளம், *s.* [*a contraction of* உள்ளம்.] Mind, heart, மனம். 2. Will, purpose, intention, எண்ணம். 3. Meaning, intrinsic meanings of a passage, &c., கருத்து.

உளத்தியலிடை, *s.* An interjection.

திருவுளம், *s.* Divine will, or the will of persons of high dignity.

உளர், *s.* Liability, exposure, ஏது. 2. [*impr. for* உளவு.] Spying.

உளராக, *inf.* To be involved, be subject to, to be exposed.

உளரு—உளர், கிறேன், உளர்ந்தேன், வேன், உளர, *v. a.* To adjust or clean feathers with the beak—as birds, சிறகுகோத. 2. To shake the wings and feathers, சிறகுதற. 3. To shake off, scatter, sprinkle, strew, சிதற. (திவா.) 4 To try, tune, or play on a lute, &c., with the fingers, யாழ்வாசிப்பதட. (*p.*) 5. *v. n.* To whirl about, whiffle—as wind, சுற்றுதல். 6. [*prov.*] To turn about or be loose—as a pin, or screw, சுழல. 7. [*vul.*] To stir, move either bodily or mentally, அசைய.

நரம்புளர்த்தமுதமூறும்கையாபாடல. The singing of the damsels who sweetly played on the lute— (கைட.)

இவ்வளவுசொல்லவியுருசற்றுமுளருகிறானில்லை.. ... Though I have said so much, he is not yet moved.

சிறைபுளர்தயலகும். (Birds) that flock in the neighborhood adjusting their feathers with the beak—

உளர்ச்சி, *v. noun.* Whirling, சுழற்சி.

உளர்வு, *v. noun.* Whirling, whiffling, moving, stirring, turning, being loose, சுழற்சி. 2. Fluctuation, wavering, உளர்கை.

உளவு, *s.* Realities, internal or secret affairs, உட்காரியம் 2. Secrets, or internal affairs, seen or ascertained by a spy to be revealed to others, இரகசியசமாசாரம். 3. Spying, prying, espionage, வேவு. 4. A spy, ஒற்றன்; [*ex* உள், inside.]

உளவிலலாமற்களவில்லை. No robbery takes place without a spy.

உளவடைக்குதல், *v. noun.* Defending one by excusing his faults.

உளவறிய, *inf.* To learn the secrets of a person, family, state, &c., for some sinister object

உளவன்—உளவாளி—உளவாள்—உளவுகாரன், *s* A spy, a scout

உளவனில்லாமலூரழியாது. Without a spy the country cannot be destroyed

உளவுகண்டவன், *s.* One who is acquainted with the secrets of another.

உளவனுக்க, *inf.* To engage one in order to fish out the secrets of another.

உளவுசொல்ல, *inf.* To discover or expose secrets, உள்ளானவைகளையறிந்துசொல்ல.

உளவுபார்க்க, *inf.* To spy, pry into, or expose another's affairs for a bad purpo , வேவுபார்க்க.

உளறு, கிறேன் ; உளறினேன், வேன், உளற. *v n.* To clamor without sense, bawl, utter unmeaning vociferations, குழற 2 To cry out through alarm, பயத்தினாற்மொறிப்பேச. 3. To be confused through fear and to speak incoherently, indistinctly, or inconsistently, to give confused evidence, வீணுயுளற 4. To utter incoherent sounds—as a person dreaming, கனுக்கணுப்பிதற்ற.

உளறுதல், *s.* A great noise, பேரொலி.

உளறுபடி, *s.* Incoherence in speaking, குழறுகை. 2. Confusion in business, கலக்கம்.

உளி, *s.* A chisel, மரவினையாளர்கருவியிலொன்று. 2. [*prov.*] A rber's instrument for paring nails, நகசீவி. 3. A place, இடம். 4. A form of the seventh case, ஏழனுருபு. 5. A burin, or graver, an instrument for engraving, சித்திரிக்குங்கருவி.

உலக்கைதேய்ந்துளிப்பிடியாயிற்று. The pestle is worn down as small as the handle of a chisel—spoken of a person emaciated by disease.

உளிக்குத்தாக்குத்த, *inf.* To buffet, to box, to strike with the fist.

சிற்றுளி, *s.* A small chisel used by carpenters.

உளியம், *s.* A bear, கரடி. (*p.*)

உளு, *s.* A wood-worm or wood-fretter, ஓர்புழு. See உக.

உளு, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To be worm-eaten—as wood, to be eaten out by worms, insects, weevils—as grain, seeds, or other cold body, மரமுதலியவைவுளுக்க. 2. To perish as flour, to become spoiled, மாவாயுளுக்க.

இந்தமரமுழுதுமுளுத்துப்போயிற்று. This wood is entirely worm-eaten.

இச்சரீரமுப்பிருந்தபாண்டம்போலுளுத்துப்போம். The body becomes corroded like a vessel in which salt is kept

உளுத்ததுவரை, *s.* The worm-eaten seed of the Cajan shrub, Cajanus Indicus.

உளுப்பு, *v. noun.* Being worm-eaten, உளுக்கை.

உளுப்புத்தாவ, *inf.* To begin to be worm-eaten.

உளுக்காரு, கிறேன், உளுக்கார்ந்தேன், வேன, உளுக்கார, *v. n.* To sit down, இருக்க 2. To sink or settle—as a wall பொறுத்துப்போக

உளுக்கார்ந்துபேச, *inf.* To speak, or to discourse sitting.

உளுக்காத்தல், *v. n.* Sitting down. See உட்காருதல்.

உளுக்கு, *s.* A sprain. See சுளுக்கு.

உளுக்கு, கிறது, உளுக்கினது, ம், உளுக்க, *v n.* To be sprained, சுளுக்க. 2. *v. a.* [*with the personal terminations*] To polish, or streak metalic articles with the smith's tool called திணைகம், &c., உலோகபாத்திரங்களுக்குமெருகிட.

உளுந்து, *s.* [*prop.* உழுந்து.] A kind of pulse, Phaseolus mungo, *L.*

உளுவை, *s.* A fish, water-fish, white caboose, ஓர்மீன, Ophicephales punctalus. (*Rott.*)

உளை, *s* The mane of a horse, lion or other animal, குதிரைமுதலியவற்றினகழுத்துமயிர். 2. A man's tuft or lock of hair, ஆண்மயிர் 3 The hair of the body, புறமயிர். 4 Sound, noise, ஒலி. 5. Articulate sounds, பேசலாலெழுமொலி. (*p.*) 6. Mud, mire, சேறு.

உளை, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To ache or suffer pain in the limbs from weariness, cold, rheumatism, நோவ. 2 To gripe, suffer pain—as persons with dysentery, வயிறுளைய. 3 To ache—as the gums in teething, பல்லுவலிக்க 4. To suffer—as in bringing forth young, குளுளைய 5. To suffer either in mind, or body; to be in a state of suffering, வருந்த In most of the meanings, a dragging or moving pain is implied.

உனக்குமுதுகுளைகிறதா? Does your back ache? i. e. why do you behave so as to incur punishment?

உளைந்துளைந்துபேச, *inf.* To express regret again and again from revolving in mind an injury received.

மூக்குளைய, *inf.* To ache—as the nose.

இடுப்புளைய, *inf.* To feel pain in the hips—as in child-bearing, or as persons in some diseases, or after a long walk.

மனமுளைய, *inf.* To be pained in mind from unkind conduct or expressions.

கால்கையுளைய, *inf.* To suffer pain in the arms and legs.

வாயுளைய, *inf.* To be tired as the mouth by constant talking.

வாயுளையுமளவுமலட்டினான். He chattered till his mouth ached.

வயிறுளைய, *inf.* To suffer as in bringing forth young. 2. To suffer with dysentery.

குடவயிறுளைந்தவயிறுளைந்தெறகுமணி. The bright pearls produced from the round conchs — (கைட.)

உளைமாந்தை, *s.* [*vul.*] An internal imposthume, சுகேரோ.

உளைவு, *v. noun.* Griping pain, throbbing, வலிப்பு. 2. Hard pain in the limbs, &c.—as from rheumatism, weariness, cold, &c., குடைவு.

உளைவுகொள்ள, *inf.* To ache—as the limbs, with weariness, &c., வலிப்புற.

உளைவெடுக்க, *inf.* To be attacked with griping, or rheumatic pains, வலிப்பெடுக்க.

காலுளைவுகையுளைவு, *s.* Pains in the limbs—as from walking, labor, &c.

பல்லுளைவு, *s.* Supposed distress in the teeth of a snake, or other animal, from the want of opportunity to gratify the disposition to bite, to discharge venom, &c

வயிற்றுளைவு, *s.* Dysentery.

உளை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To sound, ஒலிக்க. 2 To call, invite, அழைக்க. (பாரதி. and பிரக.) (*p*) 3. *v. n.* To suffer, be in a state of affliction, வருந்த. (சூ. 19.)

உளைப்பு, *v. noun.* Sounding, ஒலிக்கை. 2. Calling, அழைக்கை. 3. Pain, வருத்தம், &c.

உள். An affix to some verbal nouns, தொழிற்பெயர்விகுதி—as செய்யுள், விக்குள்.

உள், *s.* The inside, the interior, that which is intrinsic, private, secret, esoteric, உள்ளிடம். 2 Mind, heart, soul, breast, உள்ளம். 3. Place, இடம். 4. As a nominal affix or postposition, it governs the dative and expresses in, within, among, of, out of, inner, interior, intrinsic, esoteric, ஏழனுருபு.

உள்ளிருந்தார்க்குத்தெரியுமுள்ள வருத்தம். Those of the household only are acquainted with its secret sorrows.

உட்கரணம், *s.* The intellectual faculties. See இந்திரியம் and கரணம்.

உட்கருத்து, *s* The inmost thought, the real purpose or motive, அகக்கருத்து. 2. Cordial affection, உட்பட்சம். 3. The intrinsic meaning of a passage, &c., கருத்துரை.

உட்கருத்தாகப்பேச, *inf.* To speak with reservation.

உட்களவு, *s.* Guile, deceit, treacherousness, insidiousness, உள்வஞ்சகம்.

உட்கள்ளம், *s.* Deep-seated viciousness, dissimulation, உள்வஞ்சகம். 2. Internal, or unsubdued disease, hidden humor or matter—as in a boil, கட்டியினுள்விஷம்.

உட்காங்கை, *s.* Caloric, latent heat, உட்சூடு.

உட்காந்த, *inf.* To have internal heat causing emaciation; [*ex* காந்து.]

உட்காய்ச்சல், *s.* Internal fever, அக்கரம். 2. Inward anger, rancor, malice, &c., உள்வெரிப்பு.

உட்கிராந்த, *inf.* To become emaciated by disease or otherwise. 2. To be firmly rooted—as disease.

உட்குத்துப்புறவீக்கம், *s.* A species of hepatic complaint attended with convulsions, ஓர்நோய்.

உட்குயிர், *s.* The Deity regarded as the life, or identified with the life or soul of each individual, உள்ளுயிர்.

உட்குறிப்பு, *s.* Aim, object, intention, உள்ளக்குறிப்பு.

உட்குற்றம், *s.* Innate depravity. See உட்பகை.

உட்கூதல், *s.* Internal cold, chill, slight fever.

உட்கை, *s.* Palm of the hand, உள்ளங்கை. 2. A person who is privy to, a secret hand—as in உளவு. 3. Turning to the left in dancing or other movements, இடக்கைச்சுறறு.

உட்கைச்சுற்று, *s.* Turning to the left, winding or turning backwards, or contrary to the sun.

உட்கொள்ள, *inf.* To eat as a god, or great personage, உண்ண 2. To take food that has been consecrated to a deity, தேவப்பிரசாதமுட்கொள்ள. 3. To take food, medicine, to swallow, take in, imbibe—as the earth does the rain, &c., விழுங்க. 4. To receive into the mind, meditate, or reflect upon, மனதிற்கொள்ள 5. To wish for an occurrence, or to express desires mentally—as a deity or holy sage (the thing desired instantly taking place), திருவுளங்கொள்ள. 6 To have a secret object in view, to have in view, உட்கருத.

உட்கோபம், *s.* Interior anger, malice

உட்கோள், *s.* The will, determination, internal, or inmost thought, உட்கருத்து. 2. Wish of the heart. 3 Opinion, belief, tenet, கோட்பாடு.

உட்சங்கம், *s.* A select society, a committee, அகச்சங்கம்.

உட்சட்டை, *s.* An inner vest or tunic

உட்சமயம், *s.* The six religious systems of the followers of Siva, அகச்சமயம்.

உட்சாடை, *s.* The real object of an affair, the real feeling of the heart, உட்கருத்து. 2 Exposure of secrets by one of a party by signs, இரகசியங்களைச்சமிக்கையாலறிவிக்கை. 3. The meaning, thing, &c., told or known to one's own party and differing from that which is made known to others, குழூஉக்குறி.

உட்சீலை, *s.* An under or inner cloth. 2. The lining of a garment.

உட்சுவர், *s.* An inner wall, அகச்சுவர். 2. The interior of a wall, சுவரின்இடை.

உட்சுவரிருக்கப்புறச்சுவர்தீறறுகிறது. To whitewash the outside wall while neglecting the inside; i. e. to be scrupulously exact in external conduct, while the heart is full of wickedness, to attend to things remote while those at hand are neglected.

உட்சூத்திரம், *s.* The main spring in a machine, any internal power or operation concealed from view, மூலசூத்திரம். 2. A clue, or key to an affair, உளவுபாயம். 3. The main spring in a business, மூலகாரணம். 4. A skilfully contrived rule in numbers, &c., நுட்பமானவகை. 5. A short, compendious and subtle method of ascertaining, or effecting a thing, இலேசானவகை. 6. (*fig.*) Internal meaning of a passage, real object in view, உட்குறிப்பு.

உட்செல்ல, *inf.* To enter, insinuate one's self, உள்ளேபோக.

உட்டுளை, *s.* Hollowness—as of a pipe or tube.

உட்டுளைப்பொருள், *s.* Any thing tubular.

உட்டெளிவு, *s.* Cleverness of mind, freedom from doubt, profound knowledge, அகத்தெளிவு 2. The clear part of the liquid—as poured off from the sediment, வடித்தசாறு. 3. Soundness—as in timber, &c., உள்வைரம். 4. Inner measurment.

உட்டேட்டம், *s.* The secret object of pursuit, as differing from profession, or appearances, மனநாட்டம். 2. Property acquired and kept secretly, உட்சம்பத்து

உட்பகை, *s.* Internal enmity, hatred or grudge, rancor at heart with professions of friendship. 2. Internal, innate, or secret foes attached to the soul, causing actions, &c., காமாதிக்குற்றங்கள். (For the six உட்பகை, see பகை) 3 Hatred of a king by his professed friends, civil conspiracy, அரசருட்பகை.

எட்பகவனைசிறுமைத்தேயாயினுமுட்பகையுள்ளதாங்கேடு Though the internal hatred be as the fragment of a grain of rape seed, the consequent evil may be very great.

உட்பக்கம், *s.* Subject of investigation or deduction in things of a mental, mystic, or spiritual character. See பக்கம்.

உட்பட, *inf.* To enter, be within, or under—as in age, உள்ளாக. 2. To engage in, be concerned in, to be, or become one of a party, or community; to be involved in, to be subject to, to yield to, to be obedient to, உடன்பட. 3. *adv.* Together with, inclusive.

மூன்றுவயதுக்குட்பட்டபிள்ளை. A child under three years of age.

அதுபட. That inclusive.

மோசத்துக்குட்பட, *inf.* To fall into danger.

உட்படி, *s.* A make-weight, உட்படிக்கல்.

உட்படுத்த, *inf.* To cause to enter, to introduce, அகப்படுத்த. 2. To persuade, proselyte, bring one into, or over to one's party, மதத்துக்குள்ளாக்க. 3 To include, involve, entrap, ensnare, சிக்கப்பண்ண.

உட்பத்தியம், *s.* Abstinence from venery as a regimen while taking medicine, &c.; sometimes அகபபத்தியம்.

உட்பந்தி, *s.* The chief row or table of guests, அகப்பந்தி.

உட்பலம், *s.* Property at command, கைவிபலம். 2. Friends, assistants, attendants, &c., துணைவபலம். 3. Forces, army, army in reserve, சேனைபலம். 4. Strength, firmness of body, hardness, strength from food, தேகபலம்.

உட்பற்று, *s.* Internal attachment, affections of the heart, &c. See அகப்பற்று.

உட்பிரவேசம், *s.* Entrance.

உட்பிரவேசிக்க, *inf.* To enter, உள்ளேபோக, உட்புக.—*Note.* This and the preceding word are in use, but not, it is thought, on good authority.

உட்புக, *inf.* To enter, engage in.

உட்புகுந்துபேச, *inf* To make professions of friendship, kindness, concern, &c.

உட்புளை, *s.* The hollow of a tube or pipe, உட்டுளை 2 The small folds of a garment, உமடிப்பு. 3. (*fig*) The secret of the matter, internal affair, அந்தரங்கம்.

உட்புறம், *s.* The inside, உட்பக்கம்.

உட்பொருள்—உள்ளர்த்தம், *s.* The real meaning, தாற்பரியம். 2. The hidden, or secret meaning, உட்கருத்து.

சாஸ்திரத்தினுட்பொருள், *s.* The occult sense of a doctrine.

உட்போட, *inf.* To coax, to wheedle, வசமாக்க.

உண்ணா—உண்ணாக்கு, *s.* The uvula, அண்ணம், [*ex* நா, tongue.]

உண்ணாட்டம், *s.* The real or secret object of pursuit, உள்நோக்கம்.

உண்ணீரம், *s.* The moisture within a body or thing, [*ex* உள், *et* ஈரம்]

உண்ணோக்கல், *v. noun.* Contemplation.

உண்மடை, *s.* The lower opening of a water-course. 2. Oblations, or offerings of fruits, betel, rice, pastries presented to ferocious deities, inside the temple, அகமடை. See மடை.

உண்மடைநார், *s.* [*prov.*] The bark of the inner side of the palmyra stem, being the best for use.

உண்மாசு, *s.* Corruption of mind—as உபமலம்.

உண்முடிச்சு, *s.* Treachery by which one inveigles another, (*lit.*) an inner knot, உட்களவு.

உண்ணோக்கு, *s.* Secret object, project, intention, &c., உள்ளநோக்கு.

உள்வட்டம், *s.* Agio, premium in exchange of coins or other money for difference in value. (opp. to வட்டம்.)

உள்வணக்கம், *s.* Mental worship, அகவணக்கம்.

உள்வயிரம், *s.* Interior firmness. 2. Malice, internal hatred. See வயிரம்.

உள்வயிரிப்பு, *s.* Internal hardness of a boil, &c., உள்வயிரம். 2. (*fig*) [*prov.*] Property possessed, money in hand, கையிருப்பு.

உள்வலிப்பு, *v. noun.* Inward pain or convulsion.

உள்வழிகடந்தோன், *s.* God who is transcendent in knowledge and wisdom. (சது)

உள்வளைய, *inf.* To bend inwards, உட்கோண.

உள்வளைந்தவன், *s.* A stooping person.

உள்வளையல், *v. noun.* Bending forward, stooping as a person, உள்வளைந்திருக்கை.

உள்வளைவு, *s.* Inward curvature, concavity, உட்குவிவு.

உள்வாரம், *s.* Secret partiality, leaning, inclination, உள்ளன்பு. 2. The share in the produce of a field which comes to the owner.

உள்விழ, *inf.* To fall in, or with, join a party, &c., உள்ளாக. 2. To assume the appearance of friendship for a sinister object; to pretend kindness, காரியார்த்த மாய்ச்சிநேகிக்க.

உள்விழுத்த, *inf. v. a.* To join a person on professions of friendship in order to deceive and entrap him, &c.

உள்வினை, *s.* Malice, evil in the heart kept secret, long indulged, &c., உட்பகை. 2. Inherited fate, ஊழ்வினை.

உள்வீச்சுச்சன்னி, *s.* See சன்னி.

உள்வெக்கை, *s.* Internal heat of the system, உள்வெப்பு.

உள்வெட்டு, *s.* The marks on a testing piece of gold, for trying the fineness of other pieces, from eight degrees and upwards, உரையாணியிலுள வெட்டு. 2. The higher kinds of gold, உயர்தமாற்று. 3. Inner boards or planks exclusive of the slabs, அகவெட்டு.

உள்வெண்டையம், *s.* A tinkling ring of brass, put as an ornament on the feet of horses mounted by kings and great men—comp. தண்டை, which is the name of another ornament made of silver and commonly placed upon the former. 2. A pad placed between a load and the back of an ox.

உள்ளங்கம், *s.* Symmetry of mind, the internal property or quality. See அகத்துறுப்பு.

உள்ளங்கால், *s.* The sole of the foot.

உள்ளங்கை, *s.* The palm of the hand.

உள்ளடங்கிப்போக, *inf.* To be shut, shut in, to be swallowed up.

உள்ளடக்க, *inf.* To enclose, shut in, shut up in a place. 2. To conceal, to keep secret.

உள்ளடக்கம், *v. noun.* Reservedness, reserve in intercourse.

உள்ளடி, *s.* The sole of the foot, உள்ளங்கால். 2. [*vul.*] That which is secret, இரகசியம். 3. [*prov.*] Nearness, vicinity, neighborhood, சமீபம். 4. (*fig.*) One's own relations, one's own circle, நெருங்கியசுற்றம்.

உள்ளடியிலே—உள்ளடிக்குள், *adv.* At home, within doors, near home—spoken in cases of theft, mischief, &c.

உள்ளறை, *s.* An inner room, closet, cabinet, உள்வீடு. 2. A division in a drawer, box, &c.; a separate cell, பெட்டியினுள்ளறை.

உள்ளன்—உள்ளான், *s.* One of the party or family, a domestic, உள்ளிருக்குமவன். 2. A near acquaintance. 3. The head or middle one of the oxen which thresh the corn.

உள்ளனுங்கள்ளனுமாயிருக்கிறான். He is an enemy in the camp. 2. He is an inmate and yet a rogue.

உள்ளாக, *inf.* To enter in, உட்புக. 2. To become subject to, கீழ்ப்பட. 3. To join a party, engage in, சேர. 4. To be involved, to become privy to an affair, உடன்பட.

அவனுக்குள்ளானேன். I am on his side, I have taken his part.

ஆக்கினைக்குள்ளானவன். One who is doomed to punishment.

துரோகத்திற்குள்ளாகாதே. Be not a partaker in treacherous deeds.

உள்ளாக்க, *inf.* To get a person into one's party, or to interest him in one's concerns, வசப்படுத்த.

உள்ளாட, *inf.* To have intercourse with an enemy in order to effect an object, உளவேபயில.

உள்ளாசெத்துரு, *s.* An enemy in the camp, a snake in the grass, a treacherous companion, உட்பகைஞன்.

உள்ளாந்தரங்கம், *s.* Internal secrets, private matters.

உள்ளாயிருக்க, *inf.* To be engaged or concerned in an affair, to be one of a party, உடன்பாடாயிருக்க.

உள்ளாராய்வு, *s.* Deep research, thought, insight, a disposition to investigate profoundly, உள்ளாராய்ச்சி.

உள்ளாள், *s.* One who belongs to a particular party, or family—a domestic.

உள்ளிட, *inf.* To include, comprise, உள்ளடக்க.

தொல்காப்பியனையுள்ளிட்டபன்னிருவர். The twelve including Tolkappiar.

உள்ளிடை, *s.* Private affairs, intellectual concernments, உட்காரியம்.

உள்ளிடைபார்க்கவந்திருக்கிறான். He has come to pry into our secrets, and to ascertain our private affairs.

உள்ளிடையானவன், *s.* One of our compact, party, &c.

உள்ளிட்டார், *s.* Brothers and sisters of an elder brother in a joint contract, inheritance, &c., தாயத்தார்.

*கவரி, s. The yac or bos grunniens, கவரிமா. 2 A hair fan formed of the tail of the yac used for fanning idols at temple festivals, சாமரை 3. (c) A buffalo, எருமை. 4. A car, a chariot, தேர். (பாரதி) (p.)

கவரிமா—கவரிமான், s. The yac, கவரிமிருகம்.

கவரிறுக்கு, s. A kind of tree, கடவுமரம், Gyrocarpus jacquini

கவரெழுசங்கம், s. A kind of shrub, முட்சங்கம், Monetia tetracantha, L.

கவர், s. A bifurcated branch, மரக்கப்பு 2. Divarication of branches, roads, rivers, &c, இரண்டாகப்பிரிகை. 3 Prong of a trident, fork, &c., tooth, tine, spike, சூலத்தின்கவர். 4 A cavity or a kind of mortice on the top of a gate or door post to receive a beam. 5. (p.) (சது.) A plantain tree, வாழை

கப்புங்கவருமானமரம். A tree with forked branches.

கவராறு, s. The branching or junction of rivers.

கவர்க்கால், s. A forked prop. 2. A tree with forked branches.

கவர்க்குளம்பு, s. A cloven foot.

கவர்க்கொம்பு, s. A bifurcated branch.

கவர்த்தடி, s. A forked stick used as a pitch-fork, கவர்க்கோல்.

கவர்பட, inf. To be ambiguous—as language, இருபொருள்பட. 2. To hesitate, fluctuate, சிக்குப்பட.

கவர்படுமொழி, s. An ambiguity, இருபொருள்படுமொழி.

கவர்வழி, s. A place where a road divides itself into two, கிளைவழி.

கவர்விட, inf. To grow forked, divaricate, diverge, கப்புவிட. 2. To be ambiguous—as words or language, இருபொருள்பட. 3. To be undecided, சந்தேகமாயிருக்க. 4. To ramify or branch out—as a subject, கிளைக்க.

கவர்ப்பு, v. noun. Forking, bifurcation, ramification.

கவர்—கவரு, கிறேன், கவர்ந்தேன், வேன, கவர, v. a To seize, grasp, catch, capture, bereave, take by force or stealth, பறிக்க 2 To ravish, charm, captivate, attract, arrest, கிரகித்துக்கொள்ள 3 To rob, steal, plunder, pillage, கொள்ளையிட. 4 To embezzle, appropriate by force or stealth, திருட 5. To engross, usurp, grasp in large quantities, மிகச்சேர்க்க 6. To carry off, வார 7 (p) To lust after, இச்சிக்க. 8 To churn, turn by trituration or attrition, கடைய.

கண்கவர்வனப்பு, s. Beauty that captivates the sight.

கவர்ச்சி, v. noun. Seizure, grasp, captivation, bereavement, attraction

கவர்தல், v. noun. Plundering, கொள்ளையிடல. 2. Stealing, திருடல். 3. Inflamed desire or lust, ஆசைப்பெருக்கம். 4. Churning, கடைதல். 5 Carrying off, வாருதல.

கவாவு, v. noun. Seizure, grasp, &c

கவலை, s. Care, anxiety, solicitude, விசாரம் 2 Regret, sorrow, distress, affliction, grief, துயரம் 3 A kind of creeping plant with a beautiful flower and yielding an edible root, ஒரகொடி 4. Red millet, செந்தினை. 5 Concern, அக்கறை 6 (p) Fear, dread, அச்சம் 7. Disease, pain, நோய். 8 A basket of leather to draw water, நீரிறைக்குங்தோற்கூடை. 9. Cross roads, சந்தி. 10. Diverging roads, கவர்வழி. 11. A branch, the forking of branches, a fork, மரக்கொம்பு

இப்போதுனக்குக்கவலையில்லாததாலிதையெழுது .. Write this since thou art not otherwise occupied.

கவலைகொள்ள, inf. To be concerned, anxious, sorrowful; to regret.

கவலைப்பட, inf. To be concerned, be solicitous, be anxious, to care 2 To lament, sorrow, regret.

கவலைபாய்ந்துபோக — கவலையாயிருக்க, inf To be careless or confused.

கவலையேற்றம், s. A machine for drawing water by a rope, passing over a wheel and attached to a leathern basket

தீராக்கவலை, s. Unceasing, unabating, interminable sorrow

கவல், s. Care, affliction, கவலை. (சீதேசு.) (p.)

கவல், கிறேன், கவன்றேன், வேன், கவல, v n. To be anxious, concerned, distressed, to be in anguish, கவலைப்பட. 2 To regret, sorrow, lament, mourn deeply —as for a near relative or dear friend, to bemoan, புலம்ப. 3. To be afflicted either bodily or mentally, துன்பப்பட. 4. To sound indistinctly, பேசலாலொலியெழ. (p.)

கவலல், s. Concern, a noise issuing from a crowd, பேசலாலெழுமொலி.

கவறல், v. noun. Sorrowing, grieving, வருந்துதல்.

கவற்சி, v. noun. Concern, deep care, anxiety, grief, sorrow, anguish, வருத்தம்,

கவவு, கிறேன், கவவினேன், வேன், கவவ, v. n. To put in, insert, inclose, அகத்திட. (p.)

கவவு, v. noun. Rolling in, inclosing, insertion, அகத்திடுகை.

கவவுக்கைநெகிழாமல். The arm that embraces (her) remaining unrelaxed—

கவழிதை, s. Curtains, திரைச்சீலை. (p)

*கவளம், s. A morsel, a mouthful of food, வாயளவுகொண்டவுணவு Wils. p 204 Kavala. 2 A ball of rice or other grain for an elephant, யானைக்களிக்குங்கவளம். 3 Boiled rice, சோறு

கவளங்கொடுக்க — கவளம்போட, inf To feed elephants with balls of rice 2. To put the rice into the mouth in large lumps.

கவளி—கவளிகை, s. [vul] A bundle of one-hundred betel leaves, வெற்றிலைக்கைபாகு.

கவளிகரி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. a To take food—as an elephant, விழுங்க. 2 To devour, அதிகமாகவிழுங்க. 3 To deprive others of their property, அபகரிக்க. (c)

கவறு, s. Dice, சூதாடுகருவி. 2. [prov] Palmyra timber, பனம்பட்டை.

கவறுபோட — கவறுருட்ட — கவறெறிய, inf. To cast dice.

கவறை, s. A tribe of natives in Southern India, ஒர்சாதி—also called கவறைவடுகா (c)

கவறைச்செட்டி, s. An inferior division of the செட்டி caste

கவனம், s. Attention, care, heedfulness, mindfulness, notice, intentness, mental application, observance, கருத்து 2. (p.) Rapidity, celerity, velocity, சீக்கிரம் 3. The paces of a horse, குதிரைநடை. 4 Perplexity, bewilderment, கலக்கம் 5 Vehemence, கடுப்பு 6 Jungle, forest, desert, காடு. 7. Army, படை.

கவனமாய், adv. Attentively, carefully, intently.

கவனமில்லாமை, neg. v. noun. Neglectfulness, inattention, heedlessness

கவனன், s. A quick person, a person of penetration. (p)

கவனி, s. A kind of arsenic in its natural state.

கவனி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v a and v. n. (c.) To be attentive, to attend to, take notice of, to heed, observe, exercise thought, நினைவுகூர.

கவனித்துக்கேட்க, inf. To hear attentively.

கவனித்துப்பார்க்க, inf. To look at with attention, to heed, observe.

கவனிப்பு, v. noun Attention, care, கவனிக்கை.

கவா—கவாச்சி, s. [as வெள்ளைக்காக்கணம்.] A medicinal plant bearing a blue flower, Clitoria ternatea, and its variety, with a white flower

*கவாடம், s. [as கபாடம்.] A door, கதவு. Wils. p. 204 Kavata

கவாடம், s. A bullock load of grass or straw, பொதி. (c)

கவாடக்காரன், s, One who conveys such loads on bullocks.

*கவாட்சம்—கவாட்சி, s. A round window, வட்டச்சாளரம். Wils. p. 286. Gavaksha.

கவாத்து—கவாய்த்து, s. (For.) Military exercise, ஆயுதபரிட்சை. (Rott.)

கவாய்—கபாய், s (Port.) A kind of Turkish garment, மெய்யுறை.

கவாளம், s. Horse physic, ஓர்மருந்து. (Old Dic) 2. (Rott) A dressing of a wound, கவணம்

கவான், s. The thighs, the lap, தொடை (p)

*கவி, s. Planet venus, சுக்கிரன். 2. A poet, a versifier, புலவன் Wils p 204. Kavi. 3 An ape, a monkey, குரங்கு 4 A plant, பூனைக்காலி 5. One of the four classes of poets, கறகவி. (See புலமையோர்) 6. Poetry, verse, a stanza, பாடு. (p.) Poetry is of four kinds, viz.. 1. ஆசுகவி, an extemporaneous poem made by request, the theme, the kind of verse and some of the rhetorical figures to be wrought into it being given 2. மதுரகவி, a poem in which sublime and gratifying ideas are couched in rich language, with varied appropriate rhymes and rhetorical figures, and all in a sweet flowing style 3 சித்திரகவி, a poem variously or artfully composed. (See மிறைக்கவி) 4. வித்தாரகவி, an extended poem, such as the great epics Ramayana and Bharata —Note. Each of these four is also applied to the poet as well as to the poem.

கவிகட்ட—கவிபாட, inf. To make verses

கவிகற்றோர், s. Panegyrists attending a prince in his movements, மகைலபபாடகர.

கவிசொல்ல, inf. To make poetry.

கவிச்சக்கரவர்த்தி, s. A distinguished poet, புலவன.

கவிஞர், s. Poets, bards, புலவர். 2. Scientific persons, கலைவல்லோர். (p)

கவிதை, s. A poem, poetry, verse, a verse of poetry, stanza, பா (p.)

கவித்துவம், s. Poetic style or composition, புலமைத்தன்மை.

கவிநாயகன், s. The person to whom a poem is dedicated, who is also the hero, கவிக்கிறைவன.

கவிமாலை, s. Verses joined together.

கவிரத்தினம், s. A treatise on versification.

கவிராயன், s. (Hon.) A poet, புலவன.

கவிவல்லோர்-கவிவாணர், s. Learned poets, bards, புலவர்

கவிவீரராகவமுதலியார், s. The names of two eminent poets, viz.: அந்தககவிவீரராகவமுதலியார்—முத்தமிழ்க்கவிவீரராகவமுதலியார், the first of whom is said to have been born blind. (Rott)

கவீச்சுரர், s. Eminent poets.

கவி, கிறது, ந்தது, யும், ய, v. n. To cover, over-spread, bend in or over, overshadow—as branches of trees, the heavens, clouds, &c.; to canopy, over-spread, bend over, கவிய. 2. To be eager, intent, earnest; to have the mind bent upon a thing, விரும்ப. (p.)

மேகங்கள்மலைச்சிகரத்தைக்கவித்துக்கொண்டன. The clouds have covered the mountain top.

அவரமனைகவிந்திருக்கிறது He is very eager after it.

வானகவித்தவையகமெல்லாம்பெறினும். Though the whole world canopied by the heavens be thy reward—

கவிகை, v. noun. Bending, being concave, கவிவு 2 s An umbrella, குடை 3 Liberality, munificence, ஈகை (p.)

கவிதல், v. noun. Bending.

கவிவு, v. noun. Bending, bent down, concave, inclined

தாழ்வாரங்கவிவாயிருக்கிறது. The lower part of the roof is too much depressed.

கவி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v a To cover—as with an umbrella; to canopy, over-spread, bend inwards, மூட (p)

குடைகவித்தான He covered himself with an umbrella.

கவிப்பு, v noun. Covering, concavity, a bending, curvity, flexure, inclination, மூடுகை 2. s An umbrella, a canopy, குடை (p) 3 In divination by astrology, the signs which stand as many signs forward from the rising sign, as the situation of the sun is from the ஆருடம், இராசிக்கவிப்பு (See ஆருடம் and உதயம்) 4. Partiality, affection, bias, favoritism, மனக்கவிப்பு

அவர்கள்மேலேகவிப்பாயிருக்கிறார். He is partial, favorably inclined, &c, toward them.

கவிகம், s. A gum, குக்கில். (Rott.)

கவிகுருந்தம், s. A kind of arsenic, கந்தகபாஷாணம்

கவிசனை, s. (local.) A wrapper, an envelope, a cover, உறை.

கவிசினம், s. [prop. கௌபீனம்.] The under-cloth or fore-flap, கோவணம்.

கவிசினங்கட்ட, inf. To fasten up the fore-flap.

கவிசை, s. A tumor or swelling in the belly, ஒருநோய். (Rott.)

கவிச்சு, s. [vul.] Stench of fish, raw flesh, bad eggs, &c, புலால்.

கவிச்சடிக்க, inf. To smell rankly.

இரத்தக்கவிச்சு, s. The odor of blood

மீன்கவிச்சு, s. The smell of fish.

கவித்தம், s. See கபித்தம்.

கவிபபர், s. Chitties, the caste, செட்டிகள் (p.)

*கவியம், s. A bridle, reins, கடிவாளம். (p.) 2 (Anat) Frænum. Wils p. 204. Kavya.

கவிரம், s. The oleander plant, அலரி, Nerium odorum, L (p.)

கவிர், s. A thorny tree of rapid growth used for hedging, and for the support of betel vines, &c., முண்முருக்கு, Erythrina Indica, L. (p.)

கவிழ், கிறது, ந்தது, கவிழும், கவிழ, v. n. To be capsized, turned bottom upwards, turned down, தலைகீழாக 2. To hang down the head with modesty, shame, confusion, &c, தலையிறக்க. 3. To stoop, lower one's self, குனிய. 4. To be subverted, overthrown, routed, destroyed, demolished, கெட. 5 (p.) To be discomfited, தோற்க. 6. To die, perish, இறக்க. (வசாக்.)

கவிழ்ந்துபோனான். He is dead (as a vessel sunk)

கவிழ்மதத்தகைம்மா. The elephant from whose temples the secretion flows.

குடத்துத்தண்ணீர்கவிழ்ந்துபோயிற்று. The pot of water is over-turned.

கவிழ—கவிழ்ந்துவிழ, inf. To fall headlong.

முகங்கவிழ, inf. To be put to shame

தோணிகவிழ, inf. To be capsized or sunk—as a dhoney.

தலைகவிழ, inf. To hang the head.

எல்லாருக்குந்தலைகவிழ்கிறவன் One who is obeisant, civil, &c., to every one.

தலைகவிழப்பேச, inf. To abuse one so as to cause him to hang his head.

கவிழ்ச்சி—கவிழ்வு, v. noun. Overturning, subversion, கவிழுகை.

கவிழ், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To turn upside down, turn partly over, to capsize, invert, கவிழச்செய்ய. 2 To subvert, overthrow, discomfit, destroy, கெடுக்க

தன்வாயக்கஞ்சியைக்கவிழ்த்துப்போட்டான். He has upset the congee of his own mouth; i e. he has deprived himself of his maintenance.

தேசத்தையொருக்காற்கீழ்மேலாயக்கவிழ்த்துப்போட்டான். He has once turned the country upside down; i e. made a great change in public affairs

கவிழ்த்திட—கவிழ்த்துவிட, inf. To turn upside down, &c

கவிழ்த்தல்—கவிழ்ப்பு, v. noun. Over-turning.

கவினம், s. Bridle, reins, கடிவாளம் 2. Butter, வெண்ணெய் (Rott)

கவின், s. Beauty, grace, fairness, comeliness, elegance, அழகு. (p) 2. (fig) The appropriate qualities, characteristics of a person or thing, தக்கபண்பு.

கவின்றநுதமையபுங் கொன்றைபுஞ்சூடிபகண்ணுதல். The frontal-eyed beautiful Siva adorned with garlands of தும்பை and கொன்றை flowers.

கவின்—கவினு, கிறது, கவின்றது, கவினும், கவின, v. n. To be beautiful, fair, graceful, comely, elegant, அழகாயிருக்க. (p.)

கவினம், s. A place where cattle have grazed, பசுமேய்ந்தஇடம். (p.)

கவுசி, s. Fainting, குழைவு. 2. Affliction, வருத்தம். (p.)

கவுடி, s. A mode of singing, ஓர்பண். (p)

கவுதாரி, s. A partridge, ஓர்பறவை, Tetrao cinerea, L.

கவுல், s. (Hin) A treaty, capitulation, உடம்படிக்கை. 2. [prov] A bad smell, நாற்றம்.

கவுள், s. The cheeks, கதுப்பு. 2 The jaws of an elephant, யானைக்கதுப்பு. 3. The frontal sinus of the elephant whence flows a secretion called the rut, யானைமதம்பாயிடம். (p.)

கவுனி, s A kind of arsenic in its natural state, குதிரைப்பாஷாணம். 2. (Tel.) [prov.] The gate of a fort, வாசல்

கவை, s. The fork of a branch or tree, மரக்கப்பு 2. Cross roads, diverging paths, கவர்வழி. 3. Desert, wood, jungle, காடு 4 Fort, fortification, கோட்டை. (p.) 5. (c) Concern, business, வேலை. 6. (Anat.) Sigmoid, notch, எலும்புக்கவை.

கவைக்கொம்பு, s. A forked branch. 2 A forked horn, antler.

கவைத்தடி, s. A forked stick. 2. A pitch-fork.

கவைத்தாள், s. A crab, நண்டு.

கவைநா, s. Snake, பாம்பு.

கவையடி-கவைக்குளம்பு, s. Cloven foot, பிளவடி.

கவ்வாணம், s. A kind of singing or tune, ஓர்பண். (சது)

கவ்வு, s. Fork of a branch or horn, கவர் 2 Greatness, பெருமை. (p) 3. A mouthful, grasp of the mouth.

கவவை, s Care, &c. See கௌவை.

கவ்வைபார்க்க, inf. To be employed, to attend to business.

கழகம்—கழருகு, s. A public place of learning, a college, கல்விபயிலுமிடம். 2. An assembly of learned men, கல்விச்சங்கம். 3. A theatre, a stage, a place for practising the use of arms, படைபயிலுமிடம் 4. A public hall for wrestling, boxing, gaming, &c., மல்லயிலைக்கூ. 5 Place for gaming, playing dice, &c., சூதாடுமிடம். 6. Gaming, சூது (p)

கழங்கம், s. Conical pieces in the play of draughts or dice, சூதுகொருவி. (சது) (p)

கழங்கு, s. A shrub bearing a nut, கழற்சிக்கொடி, Guilandina bonduce. 2. A play among females with the above nuts, கழற்சிவிளையாட்டு 3. Possession by a spirit for uttering oracles, &c., வெறியாட்டாளனுடல். (p)

கழஞ்சு, s. An apothecary's or jeweller's weight, பணவிரண்டுபெனவெடை.

கழப்பு, கிறேன், கழப்பினேன், வேன், கழப்ப, v. n. To be idle, to decline or shuffle work, வேலைசெய்யாதுகாலம்போக்க. (c.)

கழப்பன்—கழப்பாளி—கழப்புணி, s An idle, shuffling person.

கழப்புதல்—கழப்புகை, v. noun. Laziness, idleness, slothfulness.

கழலை, s. A wen, a tubercle, excrescence, புலாகுழல்.

கழலைக்கட்டி, s. A wen.

கழல், s. The foot, கால். 2 A warrior's ankle rings, வீரக்கழல். 3. Ankle rings worn by the liberal, the beneficent, &c., to encourage a disclosure of wants; the term is often used by synecdoche for the person of the deity or great personage, கொடையாளரணிவது. 4. Sandals, செருப்பு. 5. The கழற்சிக்கொடி plant (p.)

கழலடி, s. Ankled leg.

கழற்காய், s. The fruit of the கழற்சி crickles, Guilandina bonducella.

கழற்குடம், s. A pot of கழற்சி nuts; i e one who teaches not according to the capacity of his pupils, but irregularly, teaching that first which should be taught last.

கழல்—கழலு, கிறது, கழன்றது, கழலும், கழல, v n. To become loose—as a fastening, a nail, a shoe, a handle, a lock, a leaf, hair, knot, a part of any mechanism; to be unhinged, to slip off, slough off—as a snake's skin; to become extricated, disentangled, கெடிழ்ந்துபோக. 2. To be put out of joint, be dislocated, பொருத்துவிலக. (c)

எண்ணெய்மயிரைவிட்டுக்கழன்றது. The oil has come off the hair

தலைச்சாத்துக்கழன்றது. The head-dress is untied

நின்றவனமெல்லக்கழன்றுவிட்டான். The person who stood here has slipped away.

கழலக்குத்த, *inf.* [*prov*] To frustrate an object by an unfavorable remark

கழலப்போட, *inf.* [*prov*] To let a thing lie in order that it may pass over and be done better another time, &c

கழலவிட, *inf.* To connive at, to let a thing pass or escape without notice through leniency, partiality, &c.

நஞ்சுகழலல், *v noun.* Exuding as the poison of a snake from its fangs.

ஊத்தைகழலல், *v noun.* Coming off as dirt from a cloth, a vessel, &c.

கழல்வு—கழலுதல்—கழறல், *v. noun.* Getting loose, கழல்கை.

கழற்சி, *v. noun.* Getting loose, extrication, கழலவு

கழறு, கிறேன், கழறினேன், வேன், கழற, *v a.* To charge earnestly, exhort, premonish, உறுதிசொல்ல 2. To say, declare, tell, சொல்ல. 3. To importune, press, நெருக்க. (*p.*)

கழற்றுரை, *s.* A charge, premonition, an exhortation, position, assertion, asseveration.

கழறல், *v. noun.* Exhortation, admonition, உறுதிச்சொல். 2. Word, சொல் 3. Plaguing, importuning, நெருக்கல்

கழற்கொடி—கழற்சி *s.* A plant of two species, ஓர்கொடி.

கழற்சிக்காய், *s.* The fruit of கழற்சி.

கழற்சிக்கொட்டை, *s.* Nut of the bonduce used by boys as marbles, &c.

கழற்பதி, *s.* A tree, பெருங்குமிழ் மரம்

கழற்று, கிறேன், கழற்றினேன், வேன், கழற்ற, *v. a* To unloose, unfasten, loosen, unhang, unhinge, unlock, unhook, unbolt, unrivet, unscrew, unbutton, unfetter, &c., கழலச்செய்ய. 2 To strip, take off (clothes, jewels, &c), unclothe, divest, put off the shoes, hat, head-dress, &c; to dismantle, unrig, ஆடைமுதலியனகழற்ற. 3. To disentangle, extricate, disengage, disencumber, நீக்க. 4. To slough the skin—as snakes, horns—as deer, feathers—as birds; to molt, தோல்முதலியனகழற்ற. (*c.*)

அவன்கடுக்கனைக்கழற்றிக்கொடுத்தான். He took off his ear-ring and gave it.

காப்பைக்கழற்ற, *inf.* To loosen or take off the hand rings

செருப்பைக்கழற்ற, *inf.* To put off the shoes.

கழற்றல், *v. noun.* Putting off.

கழனி, *s.* A field, a corn-field, வயல். 2. (*p.*) Agricultural districts, மருதநிலம். 3. Mud, சேறு. 4. Curtains, திரைச்சீலை. (*திவா.*)

கழனிப்பயிர், *s.* Paddy.

கழனியடுத்தவர், *s.* Agriculturists, உழவர்

கழாயர், *s.* Pole-dancers, rope-dancers, tumblers, கழைக்கூத்தர்; [*ex* கழை, a bamboo.] (*p.*)

கழி, *s.* A kind of thread, cotton, yarn, silk, &c, a hawk, a knot, a tie, அற்சுரு. 2. Salt-pans, உப்பளம் 3 Shallow sea waters, salt rivers, salt marshes, உப்பாறு 4 Lute-stick, stick for playing on the lute, a plectrum, யாழ்நரம்பினைச்சுகுந்தகருவி 5 A rod, a cudgel, a staff, a branch, a twig, a switch, கோல் 6 *adj* and *adv* Much, great, excessive, very extensive, மிகுதி. 7 [*prov*] A roll of sealing wax, lunar caustic, &c., மெழுகுவர்த்தி.

கழிக்கரை, *s.* Banks of salt rivers, marshes, &c, கழியினதுகரை

கழிக்கரைப்புலம்பல், *s.* [*in erotics.*] Persons expressing in a soliloquy a lady's lamentations for, and complaints of, her lover's absence, ஓர்பிரபந்தம். (*p.*)

கழிக்காரை, *s* A plant, ஓர்செடி.

கழிநிலம், *s* Brackish soil, marshy districts bordering on the sea, உவர்த்தரை. 2 Natural salt-pans, உப்பளம்

கழிமுகம், *s.* The mouth of a river, ஆறுநீர்க்கழிவு

கழியர், *s* Salt makers, உப்பமைப்போர் 2 Inhabitants of maritime districts, நெய்தனிலமாக்கள்.

கழியுணன், *s.* A glutton, பேருண்டியான்

கழி, கிறேன், ந்தேன், வேன், ய, *v n.* To pass by, pass from, go, remove, depart from, to pass through or over a river, &c, to pass away, lapse, கடக்க. 2 To pass as time, a season, prosperity, adversity, &c; to elapse, become spent, செல்ல 3 To pass—as excrements, மலங்கழிய 4 To be discharged, voided—as semen, &c., விந்துகழிய. 5 To be separated or detached from, நீங்க. 6. To be abated, deducted, discounted, &c., குறைய 7. To be rejected, exempted, released, excused, &c., விலக்கப்பட. 8. (*p*) To be excessive, copious, abundant, intense, to be great in quality or quantity, மிக. 9. To expire, cease, die, சாவ

சந்தைகழிந்தது The market is broken up, the fair is over.

அவனுக்குவயிறுகழிகிறது. He has a looseness.

கழிகடை, *s.* The worst, either as to persons or things; refuse, that which is base, rejected.

கழிகெட்டது, *appel. noun.* That which is reprobate, refuse, rejected, the worst, lowest, vilest, மிகக்கெட்டது.

கழிகெட்டவன், *s.* [*prov*] A reprobate fellow, a vile wretch, மிகவுங்கெட்டவன்.

கழிபிறப்பு, *s.* The birth preceding the present, முற்பிறப்பு. (*p.*)

கழியுடல், *s.* A skeleton, ஊன்கழிந்தவுடல். (*p.*)

வாழ்நாட்கழிய, *inf.* To pass, as one's lifetime.

ஏழரைகழிய, *inf.* To expire, as the seven and half years of Saturn's malign influence. See ஏழு.

ஊன்கழிந்தவெலும்பு, *s.* Pure bones, bones stripped of flesh.

கலன்கழிமடந்தை, *s.* A widow, a woman who has lost her marriage symbol.

கழிச்சல், *v noun.* Flux, looseness, கழிவு. 2. [*vul*] Cholera, epidemical flux, பேதியாதல்

கிராணிக்கழிச்சல், *v. noun.* A continued looseness

இரத்தக்கழிச்சல், *v. noun.* The bloody flux.

கழிதல், *v. noun.* Passing, கடத்தல். 2 Dying, சாதல் 3 Walking, நடத்தல் 4. Abundance, மிகுதி.

கழியல், *v noun* Departing, passing, separating, கழிதல். 2 Any thing rejected, கழிக்கப்பட்டது.

கழிவு, *v noun.* Passing, leaving, separating from, discharge—from the bowels, a sore, &c, கழிகை 2. Copiousness, abundance, excess, superfluity, intensity, surplus, redundancy, மிகுதி 3. Things ejected or left, refuse, leavings, dross, scoria, கழிகடை 4 Exception, release, exemption, rejection, elimination, நீக்குகை 5 [*in arithmetic.*] Subtraction, கழிப்புக்கணக்கு 6 Deduction, abatement, defalcation, discount, premium, allowance, தள்ளுபடி. 7. Remainder in arithmetic, சேஷம். 8. [*in logic.*] Inference by implication of opposite, as when it is said of two persons, that one is enlightened by virtuous deeds, we infer that the other is darkened by the retributions of vice; or in a case of robbery between two—that one is honest, that the other is the thief, பரிசேஷம். 9. That which is secondary, inferior, any thing bad or inferior in quality, base, vile, இழிவு

கழிவில்லை. There is none rejected. 2. There is no abatement, deduction, discount, &c.

கழிவானசரக்கு, *s.* Rejected goods.

கழிவுநிலம், *s.* Waste land—as stony or brackish spots among good land.

பத்திலொன்றுகழிவு, *s.* A deduction or premium of one in ten

கழி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a* To reject, expel, cast off, discard, exclude, dislodge, remove, strip off, separate from, detach, eliminate, அகற்ற. 2. To evacuate, void, discharge, emit, pass excrements, நீக்க. 3. To except, leave as refuse, abandon, ஒழிக்க. 4. [*in arithmetic*] To subtract, subduct, கணக்குக்கழிக்க. 5. To deduct, abate, குறைக்க 6. To discount, remit, தள்ளிக்கொடுக்க. 7. To cut off—as the hair, to pare off the nails, &c., to clear off, clear away, smooth off—as knots by cutting; to prune, lop off, தலைமுதலியகழிக்க. 8. To cast off—as exuviæ, கழற்ற. 9. To pass time, spend time, காலம்போக்க. 10. To exempt, release, free from duties—as postage, விலக்க.

கட்டிக்கழித்தபுடவை. Cast-off garments.

சாத்திக்கழித்தமாலை. Garlands formerly put on an idol taken off before another ceremony.

காலத்தைவீணிலேகழித்துவிட்டான். He spent his time in vain.

மாடுதின்றுகழித்தது. The cow having eaten enough, rejected what remained.

உறைகழித்தவொள்வாள். Glittering drawn swords.

கழித்துக்கொடுக்க, *inf.* To make an allowance in another's favor.

தீட்டுக்கழிக்க, *inf.* To purify from ceremonial uncleanness—as after child-birth, &c.

வருந்திக்கழிக்க, *inf.* To pass time in suffering.

மலங்கழிக்க, *inf.* To pass excrement.

கண்கெழிக்க, *inf.* To enjoy to satiety—as earthly good 2. To be deprived of appetite by having much to do with food—as cooks, &c

சாந்திகழிக்க, *inf.* To remove the evil influence of planets by presenting offerings to them, &c.

எச்சில்கழிக்க, *inf.* To purify a place where some one has taken food

கழித்தல், *v. noun.* The act of rejecting.

கழிப்பு, *v. noun.* Expulsion, rejection, emission, கழிகை. 2. Offering to planets, demons, &c, to remove their malignity, சாந்திகழிக்கை. 3 Blemish, defect, fault, குற்றம். 4 That which is refused, rejected. 5 [*in arithmetic.*] Subtraction, கழிப்புக்கணக்கு.

கழிப்புக்கழிக்க, *inf.* To expel malign influence by offerings. This is done by waving boiled rice, cakes, &c over the head of the patients after which the materials used are thrown away.

கழிநெடில், *s.* A line of more than five feet in a verse, ஐஞ்சீரின்மிக்கசீரானவடி. 2 A kind of verse the lines of which consist of more than five feet, கழிநெடில்விருத்தம்

கழிநெடிலடி, *s.* A line in poetry, consisting of more than five feet, ஐஞ்சீரின்மிக்கவடி.

கழிப்புல், *s.* A kind of grass, Rotbœllia lævis.

கழிமுட்டான், *s.* A kind of grass, நாய்ப்புல், Apluda aristata.

கழு, *s.* A stake for impaling criminals, கழுமரம். 2. (*p.*) A trident, சூலம். 3 An eagle, கழுகு. 4 [*vul*] A green clump or clod of grass, புற்பற்றை.

கழுக்களம், *s.* A place of execution by impaling

கழுக்குன்றம்—திருக்கழுக்குன்றம், *s.* A mountain north-west of Madras, sacred to Siva.

கழுச்சிறையன், *s.* One who deserves impaling.

கழுப்பற்றை, *s.* A clump or tuft of grass.

கழுமரம், *s.* A stake for impaling malefactors.

கழுமரம்போலநிற்கிறான். He stands like a stake, sullen, unmoved, &c.—spoken in anger.

கழுமுள், *s.* A trident, சூலம். 2. A spear, a spike, ஈட்டி. 3. A stake for impaling, கழுமரம். 4 Arms in general, ஆயுதப்பொது 5. Pomegranate tree, மாதளை, Punica granatum. (*p*)

கழுமோத—கழுவறைய, *inf.* To cover the ground with green clods.

கழுவன், *s.* [*prov.*] A daring villain, a rascal, one deserving the stake, மிகு துட்டன்.

கழுவாணி, *s.* The iron spike on the top of an impaling stake, கழுவினுள்ள வாணி.

கழுவாய்நிலம்—கழுவெளி, *s.* A green field from which clods are taken.

கழுவினெய்யுருக்கி, *s.* [*prov.*] A woman who collects the juices that fall from persons impaled as a philter for fascinating paramours—a term of abuse or reproach, கொடியவள்.

கழுவேற, *inf.* To be impaled, கழுவேற 2. To partake voluntarily in another's sufferings, through friendship, பிறனைவருத்தத்தாங்க.

கழுவேறி, *s.* A malefactor, one impaled, கழுவிலேறினவன். 2. A villain, a pest, துணிவுடையவன்.

கழுவேற்ற, *inf.* To impale.

கழுவேற்றம், *v. noun.* Impalement.

சிங்காரக்கழு, *s.* A gibbet.

கழுகு, *s.* An eagle, ஓர்பறவை.

கழுக்கடை, *s.* A spear, ஈட்டி.

கழுக்காணி, *s.* [*prop.* கழுவாணி.] A short thick person, குறளன்.

கழுது, *s.* Demon, a vampire, பிசாசு 2. A shed with an elevated platform for guarding fields against beasts, birds, &c, பரண் 3 A beetle, வண்டு. 4 Guard, defence, காவல். (*p.*)

கழுதை, *s.* An ass, கத்தபம். 2. (*c.*) A dolt, மூடன். 3 (*p*) The sign of the sixth guardian of the eight angles or points of the world, வடமேற்றிசைப்பாலனகுறி

கழுதைப்புண்ணுக்குப்புழுதிமருந்து Dust is the medicine for an ass's wounds; i e for the poor any thing serves for medicine.

கழுதையுங்குதிரையும்பிணைத்தாற்போலே, Ill-matched—as an ass and a horse

கழுதைக்கரணம், *s.* [*in astrology.*] One of the eleven தைதுலாகரணம்.

கழுதைக்குடத்தி—கழுதைப்புலி, *s.* A hyena, புலிக்குடத்தி.

கழுதைக்குட்டி—கழுதைமறி, *s.* A young ass.

கழுதைநிறம், *s.* Grey, the color of an ass.

கழுதைக்குணம்—கழுதையாட்டம், Stupidity.

கழுதைத்திசை, *s.* [*in astrology.*] The north-west quarter, வடமேற்றிசை.

கழுதைமயிர்பிடுங்கியூர், *s.* A country where they pluck off the hair of the ass; i.e. doing as others do without reason.

கழுதைவாகனி, *s.* The goddess of ill-luck, மூதேவி.

கழுதைவிட்டை, *s.* Ass's dung.

கழுதைவிட்டையானாலுங்கைநிறையவிருந்தாற்போதும். If the hand is full though with nothing but ass's dung, it is enough; i. e. get a great quantity

கோவேறுகழுதை, *s.* Mule.

கழுத்தல், *s.* A lie, பொய். (*p.*)

கழுத்து, *s.* The neck of a person, brute, thing, &c., கண்டம்.

கழுத்தடி, *s.* The lower part of the nape of the neck, தோண்மேல்.

கழுத்தறுக்க, *inf.* To cut the throat, to sever the wind-pipe.

முன்விட்டுப்பின்னேகழுத்தறுக்கலாமோ...... Would you bid one take precedence and then cut his throat?

ஒருவனைக்கழுத்திலேகட்டிவிட. To devolve unpleasant consequences on another. 2. To attribute a crime or blame to a person. 3. To impose on another unsaleable goods, or a woman ineligible for marriage.

கழுத்திடுகயிறு, *s.* Halter for a beast.

கழுத்திருத்த, *inf.* To have the neck pressed down with a heavy load. (*c.*)

கழுத்திலேகயிறுபோட, *inf.* To threaten self-immolation for the purpose of recovering debts, &c. 2 To be very treacherous, insidious, perfidious. (*c.*)

கழுத்துக்குட்டை, *s.* A neckcloth, a cravat. (*c.*)

கழுத்துக்கொடுக்க, *inf.* To lay down the neck for another on the block, to subject one's self to inconvenience or danger 2. To expose one's life by a commission of crime. 3 To submit to the yoke as bullocks

கழுத்துச்சந்து, *s.* The joint of the neck

கழுத்துச்சுளுக்கு, *s.* Straining of the ligaments of the neck by violent turning of the head.

கழுத்துத்திருக, *inf.* To wring off the head of a fowl, &c. 2. To throttle, twist the head.

கழுத்துநெடியபானை, *s.* A long-necked pot.

கழுத்துப்பட்டிகை, *s.* A collar, a cape.

கழுத்துப்பட்டை, *s.* The collar of a cloak.

கழுத்துப்பருத்திருக்க, *inf.* To have a thick neck.

கழுத்துப்பொருத்தம், *s.* One of the ten பொருத்தம் for marriage, மணப்பொருத்தம் பத்திலொன்று. (*c.*)

கழுத்துமுறிக்க—கழுத்தைமுறிக்க, *inf.* To break the neck—spoken of the power, &c., of demons.

வேண்டாமெனறுகழுத்தைமுறிக்கிறான். He absolutely refuses, it is very repugnant to his feelings, &c.

கழுத்துவெட்டி, *s.* A cut-throat, a betrayer, an assassin. (*c.*)

கழுத்தூட்டி, *s.* The throat. (*p.*)

கழுத்தேறுதண்டம், *s.* Aggravated or very heavy punishment.

கழுத்தைநெரிக்க, *inf.* To throttle one.

கட்டுக்கழுத்தி, *s.* A married woman.

கழுநீர், *s.* The red water-lily, உற்பலம், Nymphæa rubra

கழுநீர்ப்பூ—கழுநீர்மலர், *s.* The flower of the lily.

கழுந்து, *s.* The heart or core of a tree, வயிரம். 2. A tenon, தேயத்துமுகத்திரண்டவடிவு.

கழுந்தாக்க, *inf.* To make tenons for dovetailing or other joints.

உலக்கைக்கழுந்து, *s.* The end of a pestle (*Rott.*)

கழுமு, கிறேன், கழுமினேன், வேன், கழும, v. n. To join, unite with, இணைய. 2. To be fascinated, bewildered, confused, மயஙக. 3. To be full, complete, replete, perfect, நிறைய 4. To be abundant, copious, plentiful, மிக. (p.)

கழுமல், v. noun. Fulness, நிறைதல். 2. Confusion, மயக்கம். 3 Abundance. மிகுதி 4 Seizing, பற்றுதல்.

கழுவு, கிறேன், கழுவினேன், வேன், கழுவ, v. a. To wash, wash off, wash out, wash away, cleanse by washing, to purify, rinse, சுத்தஞ்செய் 2 To free from, dispel —as moral evil. மனவழுக்குக்கழுவ (c.)

கழுநீர், s. Water in which rice has been washed, அரிசிகழுவியநீர். (c)

கழுவிக்கொள்ள, inf. To wash, cleanse

கழுவிப்போட, inf. To wash off.

கைகழுவ, inf. To wash the hands of one, to reject totally.

கால்கைகழுவ, inf. To wash the hands and feet.

கலத்தைக்கழுவ, inf. To wash a brass dish.

கால்கழுவ, inf. To wash after passing excrement, lit. to wash the feet.

மலங்கழுவ, inf. To expel moral evils from the soul.

கழுவல்—கழுவுதல், v. noun. Washing, cleansing.

கழை, s. The bamboo, மூங்கில், Bambusa arundinacea 2. Sugar-cane, கரும்பு 3. The seventh lunar asterism, புனர்பூசம். (p.)

கழைக்கூத்து, s. Pole-dancing, வேழம்பர்கூத்து.

கழைக்கூத்தர், s. Pole-dancers, வேழம்பர்.

கழைக்கூத்தாடி, s. A pole-dancer.

கள, s. A thorny shrub, களாச்செடி. (p.)

*களகண்டம், s. The Indian cuckoo, குயில்—also written காளகண்டம். Wils p 200. Kalakanta. (p.)

களகம், s. The mountain rat, பெருச்சாளி. (p)

*களகம்பளம், s. A bull's dewlap, the excrescences on a goat's neck, அலேதாடி. Wils. p. 285. Galakambala. (p.)

களகளப்பு, s. Din, roar, gurgling, wambling, &c., ஒலிக்குறிப்பு. (c.)

*களகளம், s. A loud and confused noise—as the din of a bazaar, the roaring of water, &c., பேரொலி. Wils. p. 200. Kalakala.

களகவெனல்—களகளவெனல், s. Tingle, flow with a gentle sound, chatter, &c., ஈரடுக்கொலிக்குறிப்பு. (c.)

களகளவெனக்கொதிக்க, inf. To sound—as water in boiling.

களகளவெனவிரும, inf. To sound —as phlegm in the chest.

களகளவெனவொலிக்க, inf. To roar—as water, multitudes.

களகளவென்றுசிரிக்க, inf. To laugh, making a noise.

களகொளெனல், s. Mumbling, ஒலிக்குறிப்பு (c)

களகொளென்றுவயிறிரைய, inf. To wamble—as the bowels

களக்கர், s. Inferiors, புலேயர். 2. Hunters, a caste living by the chase, வேடர் (p)

களங்கட்டி, s. A kind of fish, ஓர்மீன்

களங்கம், s. A spot, a mark, a sign, a token, அடையாளம். (p) 2 (c) A stain, a blot, a tarnish, a blemish, soil, மாசு 3. Fault, defect, moral or ceremonial defilement, குற்றம். 4. Black, கறுப்பு 5. Blue, நீலம். 6. Rust, verdigris, any thing that deteriorates, களிம்பு 7. A kind of arsenic in its natural state, தொகைபாஷாணம்.

களங்கசத்துரு, s. Fountain containing lead, சயமணலைலே

களங்கமற, inf. To be free from defects.

களங்கமற்றிருக்க, inf. To be spotless, sincere, pure.

களங்கமில்லாதநடக்கை, s. Pureness of living.

களங்கமுள்ளவன், s. One whose character is sullied 2. A knave, a fraudulent person

நிஷ்களங்கம், s. Purity.

களங்கன், s. The moon, சந்திரன், lit. the spotted. (p.)

களங்கு—களங்குமுறை, s. A compound of metallic bodies prepared with mercury and made into pills, பலலோகங்களைநுண்டாக்கியஇரசகுளிகை. (Rott)

களஞ்சி, s. A kind of arsenic, சூதபாஷாணம்.

களஞ்சியம், s. A granary, a barn, தானியமிருக்குமிடம். 2. A store room, a repository, a treasury, a magazine, பொக்கசசாலே. (c.)

களஞ்சியத்திலேபோட, inf. To put into a barn.

*களதவுதம்—களதூதம்—களதௌதம், s. Silver, வெள்ளி. Wils. p. 200. Kaladouta. (p.)

*களத்திரம், s. A wife, மனைவி. 2. Family, race, குடும்பம். Wils p. 200. Kalatra. (p.)

களத்திரகாரகன், s. The planet regarded as the ruler of the seventh sign from the rising sign at birth, சுக்கிரன்.

களத்திரதானம், s. The seventh from the rising sign at the moment of birth, portending the person's circumstances in respect of the wife (if it predict any), her disposition, wealth, longevity and other properties, எழாமிடம்.

களத்தூர்—களந்தை, s. A town near Chingleput, ஓரூர்.

களந்தி, s. The fruit of a தான்றி tree, Terminalia bellerica, L. (M. Dic.) (p.)

*களபம், s. A young elephant, யானைக்கன்று. 2. An elephant, யானே. 3. Fragrant ointment, perfumery, கலவைச்சாந்து. 4. A mixture, கலப்பு. 5. Mortar, cement, சுட்டசாந்து Wils. p. 200. Kalab'ha. (p.)

களப்பன்னை, s. A shrub, ஓர்செடி.

களப்பு, s. Shallow sea, shallows at sea, கடலிறுழமிலலாவிடம்.

களமூர், s. A town near Madura, ஓரூர்.

களம், s. Place, locality, open space, area, a wide extent, expanse, இடம் 2 Black, dark, கறுப்பு 3 Poison, venom, விடம் 4. Neck, throat, மிடறு 5. A wife, மனைவி 6. Barren or brackish ground, களர்நிலம். (p) 7. (c.) A threshing floor or place in a field for treading corn, நெற்களம் 8. The place or site of a battle, a field of battle, போர்க்களம் 9. Shallow shelf of rocks at sea, bank under water, sand-bank, shoal, &c., கடலின்மேடு

களத்திலேதோணிபொறுத்துப்போயிற்று. The dhoney is aground on a shoal.

களப்பலி, s. A human sacrifice, that of valiant men to Doorga, the goddess of war, previous to battle to secure victory, யுத்தகளத்திலிடுமபலி.

களப்பலியிட—களப்பலியூட்ட, inf. To offer human sacrifice.

களப்பாட்டு, s. Threshing floor songs, போரடிப்போர்பாடும்பாட்டு

களப்பாய், s. A mat spread on the floor to tread out grain, களத்திலவிரிக்கும்பாய்.

களப்பிச்சை, s. Alms given to religious mendicants at a threshing floor, களத்திலிடும்பிச்சை.

களப்பேச்சு, s. Auspicious terms, language, &c., of the threshing floor, களபரிபாஷை.

களப்பேறு, s. [prov.] The portion of grain, distributed at a threshing floor among religious mendicants, also given to a washerman, barber, and other dependent castes, நெற்களத்திற்பெறும்பலன்

களமதி, s. Estimation of the quantity of grain upon a threshing floor.

களமளக்க, inf. To measure at the threshing floor, களத்திலெநெலமுதலியனவளக்க

களமர், s. Husbandmen, agriculturists, உழவர். 2. The பள்ளர், or one of the divisions of the வைசியர் caste. 3. Inhabitants of agricultural districts, மருதநிலமாக்கள். 4. The Sudra caste, சூத்திரர் (p.)

களம்விடாமலெபாட்டடிக்க, inf. To sweep clean the threshing floor.

களவழிநாற்பது, s. A poem in forty stanzas descriptive of a field of battle. (Rott.)

களவாரம், s. [com. களவாசம்.] The portion of grain given from the threshing floor to the workmen, களத்திற்கொடுக்குமவாரம.

உலேக்களம், s. A forge.

கொலேக்களம், s. A place of execution.

யுத்தகளம்—படுகளம், s. A field of battle.

படுகளத்திலெமுறைப்பாரியர. Are relationships observed in the battle-field?

களரவம், s. A dove, pigeon, புறா. (p.)

களரி, s. A field of battle, போர்க்களம். 2. A jungle, காடு. 3. Blackness, கருமை. 4. The neck, மிடறு. 5. Barren or brackish ground, களர்நிலம். 6. Uncultivated ground, பாழ்நிலம். (p.) 7. A circular area for dramatic performance, gladiatorial or gymnastic exhibitions, &c., an arena, நாடகசாலை. 8. An assembly, கூட்டம்.

களரிகட்ட, inf. To ingratiate one's self with the attendants, officers, &c., at court, so as to secure the superior's interest, அவையடக்கஞ்செய்ய. 2. To form an area for the performance of a play, நாடகசாலைகட்ட. 3. To prevent by magical spells from singing or acting in a play, கூத்தாடாமற்றிருத்திறுகட்ட.

களரிக்கோழை, s. Bashfulness in a performer, preventing him from appearing in an area, சபைக்கோழை.

களரியமர்த்த, inf. To seat the spectators round an area. 2. To silence the spectators by beating a certain time on a drum

களரிவிட, inf. To exhibit a play after training in full attire, சபையிலாடவிட.

களர், s. Barren or brackish ground, களர்நிலம்.

களர்மண், s. Alkaline earth.

களவம், s. Mixture, கலப்பு. (p.)

*களவு, s. Theft, robbing, pilfering, purloining, stealing, depredation, திருட்டு. 2. Deceit, treachery, roguery, clandestine, or illicit acts, வஞ்சனை 3 [in erotics.] The secret intercourse of lovers, illicit connexion, adultery, fornication, whoredom, any clandestine intercourse of the sexes chiefly of the female, களவொழுக்கம். 4. Counterfeiting in work, கள்ளவேலை. 5 (p) The களா shrub, களாச்செடி. 6. Stupor, bewilderment, the fury of passion, &c., உன்மத்தம்.

களவன், s. A thief, rogue, a felon, கள்வன். 2 A crab, நண்டு. 3. Cancer of the zodiac, கர்க்கடகவிராசி.

களவாட—களவாள, inf. To steal, திருட.

களவாளி, s. A thief, கள்வன்.

களவியல், s. A branch of அகப்பொருள், treating on illicit intercourse

களவில்லாமை — களவின்மை, s. Freedom from theft, safety.

களவுசெய்ய—களவெடுக்க, inf. To steal, rob, pilfer, திருட.

சோதனையிற்களவுசெய்ய, inf. To defraud, or betray trust in examination.

களவுபண்ண, inf. To play truant. 2. To embezzle, betray trust, peculate.

களவுபிடிக்க, inf. To catch a thief by stratagem, magic, &c.

களவுப்புணர்ச்சி, s. Illicit cohabitation.

களவொழுக்கம், s. [as களவியல்.] Illicit intercourse, களவு.

*களவுதம், s. Silver, வெள்ளி. (p.)

களன், s. Place, area, open space, expanse, இடம். 2. Agricultural districts, arable land, rice fields, மருதநிலம் 3. Stupor, bewilderment, frenzy, passion, உன்மத்தம் 4. Sound, noise, ஒலி 5. Friendship, love, நட்பு 6. Company, society, an assembly, சபை 7. Neck (another form of the word களம்), கழுத்து. (p.)

களா, s. A thorny shrub bearing an edible black fruit, களாச்செடி.

சொத்தைக்களா, s. A shrub, Flacourtia sepiaria.

பெருங்களா, s. Carissa carandas; the fruit of both is eatable.

சிறுகளா, s. Carissa diffusa.

களாசம், s. A cane, walking stick, பிரம்பு. (p)

களாசாத்திரம்—களாநூல், s. A scientific treatise concerning four different kinds of women See கொக்கோகம்.

களாபடனம், s. One of the fourteen acts of beneficence. See தருமிருத்தி

களாவகம், s. A kind of greens, சிறுகீரை, Amaranthus campestris, L (p)

களி, s. Joy, gladness, delight, exhilaration, exultation, mirth, jollity, hilarity, மகிழ்ச்சி. 2. Riot, revelling, காமுகரெல்லாருருந்திக்களிக்கை. 3 Wantonness, licentiousness, unrestrained passions, arrogance, சிறந்மை 4. Bewilderment, aberration of mind or intellect, intoxication whether from liquor or circumstances, frenzy, fury, மயக்கம் 5. Toddy, vinous liquor, கள். 6. A person intoxicated with money, learning, liquor, &c., a reveller, செருக்குள்ளவன (p.) 7. Thick pulp, any soft, thick mass —as thick pap, &c., the quality or consistency of a thick paste or glutinous matter, இறுகியபழச்சாறு 8. A kind of pap or hasty-pudding, குழம்பு. 9. A kind of pottage hard in itself and made with flour, மாவாற்கிண்டியகளி.

களிகிண்ட—களிகிளற, inf. To make களி, pap.

களிகூர, inf. To rejoice, exult, மகிழ்ச்சிகூர.

களிக்காய், s. Pulpy fruit, களிப்பாக்காய்.

களிநெஞ்சன், s. A jovial, wanton person.

களிப்பாக்கு, s. Areca-nut boiled and dried, அவித்தபாக்கு.

களிமண், s. Clay, potter's clay.

களிமண்ணடைக்கிறதுபோலவடைத்துப்போடுகிறான். He takes in, or swallows up as if he had to fill (a pit) with clay; i e. he is a glutton, a gormand, a gormandizer.

களிமண்தரை, s. Clayey soil.

களியர், s. Bacchanalians, drunkards, கள்ளுண்டெளிபோர்.

களியாவண்ணம், s. A poem extolling the advantages of high living, dainty food, vinous liquors, &c., an epicurean poem, ஓர்வண்ணம்.

களியாட்டு, s. Drunken feasts, bacchanalism, revels, உண்டாட்டு

தேம்பாருக்களி—கம்புக்களி—சோளக்களி, s. Pottage prepared with the flour of different grains.

களி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To joy, exult, rejoice, to be exhilarated, சந்தோஷிக்க. 2. To experience extatic joy, to glow with delight, மிகுமகிழ்வடைய. 3. To be mirthful, jovial, gay full of glee, களிப்படைய. 4. (p) To be proud, vain, conceited, intoxicated with pride, &c., செருக்குற To be wanton, frolicsome, wilful, licentious, இன்புற 6. To be inebriated (with liquors, drugs, &c.), வெறிகொள்ள 7. To revel, luxuriate—as bees, beetles, &c, feeding on the honey of flowers, களிபாட.

களித்தல், v. noun. Rejoicing, மதர்த்தல்.

களிகம், s. A medicinal shrub, வாதுளுவை.

களிகை, s. Tender flower-buds, இளம்பூவரும்பு See கலிகை. (p.)

களிக்கன், s. [prov] In jewelry, an instrument used for drawing wire for chain work, சம்பிடாகருவிப்பேழைறு.

களிக்குளம், s. A town on the Malabar coast, ஓரூர்.

களிதம், s. Slipperiness, muddiness, வழுக்கல். (p) (சது.) 2 A huge stone, பெருங்கல் (Rott.)

களித்துறை, s A town in Ceylon, Callitoor near Colombo.

களிப்பு, s. Joy, exultation, delight, அதிசந்தோஷம் 2. Mirth, joviality, glee, hilarity, மகிழ்ச்சி 3. (p) Vanity, conceit elation, செருக்கு 4. Wantonness, wilfulness, licentiousness, சிற்றின்பம் 5 Intoxication, inebriation, வெறிகொள்ளுகை. 6. (p) Intention, உள்ளக்குறிப்பு.

செல்வக்களிப்பு, s. Joy or high satisfaction from prosperity 2. Elation from prosperity.

மனக்களிப்பு, s. Joy, delight, great satisfaction.

களிமம், s. A rat, எலி. (சது.) (p.)

களிம்பு, s. Verdigris, மலினம். 2. Rust, துரு. (Mat. Ind) 3. The evil principle connected with the soul from eternity, leading to births and their sufferings and enjoyments, குற்றம்.

களிம்பற்றவன், s. A man of unimpeachable character.

களிம்புதிக்க—களிம்புபட—களிம்புபிடிக்க, inf. To form as verdigris

களிம்பூற—களிம்பேற, inf. To form as verdigris in a slight degree. 2 To become spoiled—as whey, curds, &c, kept in a brass vessel.

களிவாய்நஞ்சன், s. A very venomous snake, ஓர்பாம்பு.

களிறு, s. A male elephant, ஆண்யானை 2. A boar, ஆண்பன்றி. 3. A male shark, ஆண்சுறா. 4. The thirteenth constellation, அத்தநாள் 5. The male of beasts in general, விலங்கினுண்பொது (p.)

மதக்களிறுபோலே. As wild as an elephant in rut.

களுக்குக்களுக்கெனல், inf. [vul.] To gurgle in swallowing, or as water pouring from a goblet, ஒலிக்குறிப்பு.

*கலேபரம், s. A corpse, பிணம். 2. Bones, எலும்பு. 3. Body, உடல். Wils. p 202. KALEVARA. (p)

களை, s. Tares, grass, weeds, &c., among corn, or other vegetables, பயிர்க்களை. 2 Weariness, அயர்வு 3. Splendor of countenance, glow, lustre, shining, காந்தி. 4. Beauty, handsomeness, அழகு (c) 5. (p) Dross, refuse, defect, fault, குற்றம். 6 One of the ten தாளம், or rules for keeping time, தாளபரிமாணபத்திலொன்று.

களைகட்ட, rel. part. Weeded as corn, &c

களைகொத்த, inf. To weed.

களைகொள்ள, inf To begin to shine—as the countenance from the influence of the deity.

களைகொட்டு—களைக்கோல், s. A weeding hook, களைபறியுங்கோல்.

களைச்சத்தகம், s. [prov] A hooked kind of paddle for weeding corn, களைகளையுமாயுதம்.

களைஞர், s. The base, villains, wretches, rogues.

களைதீர—களைதெளிய—களையாற, inf To recover from fatigue, languor, &c, அயாவுதீர்க்க.

களைபறிக்க—களைபிடுங்க—களைவெட்ட, inf. To weed corn, &c, களைகளைய.

களையாற்ற, inf. To revive one from fainting, இளைப்பாற

களையேற, inf. To shine as the face of a person or idol, from the influence or indwelling of a deity, பிரகாசமதிகரிக்க. 2 To increase, as the phases of the moon, சந்திரகலைவளர.

களைவாரி, s. A tool for weeding, களைபறிக்குங்கருவி.

முகக்களை, s. Lustre of countenance

சூரியகளை, s. Brightness of the sun

தெய்வகளை, s. Lustre of countenance, supposed to result from the indwelling of the deity, விசேஷகளை.

களை, கிறேன், ந்தேன், வேன், ய, v. a To strip or put off clothes, to reject clothes or jewels, &c, சீலைமுதலியகளைய. 2 (p.) To weed, pull up, extirpate, eradicate, களைபிடுங்க 3 To exterminate, extirpate a family, foes, &c., to kill, destroy, கொல்ல. 4. To remove, expel, extrude, separate, reject, lop off, to shave the hair, the beard, &c., to pare the nails, &c, to cut or pull the hair, &c., to molt—as birds, அகற்ற. 5 [in arith.] To subtract, கணக்குக்கழிக்க.

வன்சொற்களைந்து. Avoiding offensive speech—

புடவைகளைய, inf. To cast off dirty or impure clothes 2. To put off clothes—as ceremonially impure from catamenia. 3. To be subject to catamenia; i. e not pregnant.

களைதல்—களைவு, v. noun. Extirpation, weeding, plucking, stripping off.

களை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To be fatigued, be exhausted with hunger, running, hard labor, from the heat of the sun, being flogged, &c., to be languid, to flag, droop, இளைப்புற. 2. To faint, swoon, சோர.

களைத்தல்—களைப்பு, v. noun. Fainting.

களைகண், s. Support, succor, protection, ஆதரவு 2 A protector, a succorer, one to whom recourse may be had for relief, உதவி. (p)

கள், s. Toddy, vinous liquor, மது. 2. The plural termination of nouns, pronouns and verbs, பன்மைவிகுதி 3. (p.) Honey of flowers, தேன். 4 Stealing, theft, களவு 5 Lying, falsehood, deception, பொய்.

கள்ளுக்குடியன்—கள்ளுணி—கள்ளுண்ணி, s. A drinker, a tippler, a toddy-drinker, கள்ளுண்போன்.

கள்ளுச்சேர்க்க, inf. To gather toddy from the tree, கள்ளிறக்க.

கள்ளுண்ணி, s. A beetle, a bee, வண்டு, lit a honey-bibber. (p.)

கள்—கள்ளு, கிறேன், கட்டேன், வேன், கள்ள, v. a. To steal, rob, திருட. 2. To be treacherous, insidious, to entertain furtive designs, வஞ்சிக்க (p)

கள்ளல்—கள்ளுதல், v. noun. Stealing, திருடல்.

கள்ளாமை, neg. v. noun. The duty of avoiding theft

கள்வன், s. A thief, a robber, a rogue, திருடன். 2. (p.) A black or dark person, கரியன். 3. A crab, நண்டு 4. Cancer of the zodiac, கர்க்கடகவிராசி. 5 A monkey, குரங்கு 6. The red monkey, முசு. 7. An elephant, யானை. (சது)

கள்ளம், s. Guile, treachery, deception, imposition, dissimulation, insidiousness, roguery, villany, knavery, turpitude, spuriousness, counterfeitness, perfidy, depravity, வஞ்சகம். 2. Stealing, robbery, fraud, embezzlement, shuffling, tricking, cheating, circumvention, intrigue, களவு. 3 Lying, falsehood, பொய். 4 Fault, crime, guilt, defect, blemish, குற்றம். 5 Morbid matter concealed in a boil, or lodged in the system and causing irritation, புண்ணினுட்கள்ளம். 6 Unlawful, illicit acts, slyness, trickishness, sinister views, under-hand way of doing things, covert, கபடம்.

கள்ளவெயிலுங்கள்ளமழையும். Alternate rain and sun-shine when neither can be relied on.

கள்ளஒப்பம், s. A forged signature.

கள்ளக்கடை, s. A shop or bazaar for the reception of stolen goods.

கள்ளக்கப்பல், s. A piratical vessel, திருட்டுக்கப்பல்.

கள்ளக்கப்பற்காரன், s. A pirate.

கள்ளக்கயிறு, s. A kind of double string for opening and closing a book or purse.

கள்ளக்கவறு, s. False dice, கள்ளச்சூதாடுகருவி.

கள்ளக்கவி, s. Flagrant plagiary, சோரக்கவி.

கள்ளக்காசு—கள்ளநாணயம்—கள்ளப்பணம், s. Base or counterfeit coin, செல்லாக்காசு.

கள்ளக்காய்பட, inf. To fail as fruits in the process of ripening by smoke

கள்ளக்கிடை, v. noun. Lying deceptively, shamming sickness, sleep, or death, வஞ்சனையாகப்படுத்திருக்கை.

கள்ளக்குணம், s A false, insidious, deceptive disposition, திருட்டுக்குணம். 2. Insidiousness in boils, diseases, &c, deceptiveness, changeableness in weather, wind, the sea, &c., கள்ளத்தோற்றம். 3 Tricks, vices, &c., in beasts, கபடக்குணம்.

கள்ளக்கையெழுத்து, s. A false signature, a forgery.

கள்ளச்சத்தியம், s. A false oath, perjury.

கள்ளச்சரக்கு, s. Smuggled or contraband goods.

கள்ளச்சாதி, s. The Kallar tribe, a caste in South India.

கள்ளச்சி, s [prop. கள்ளி.] A female thief, திருடி.

கள்ளச்சீட்டு, s. A forged bond, note, draught, &c.

கள்ளச்சொல், s. Lie, falsehood, பொய். 2. Pretence, pretext, திருட்டுப்பேச்சு.

கள்ளஞானம், s. Hypocrisy in religion

கள்ளஞ்செய்ய, inf. To commit fraud, to embezzle, களவுசெய்ய.

கள்ளத்தனம், s. Cunning, craftiness

கள்ளத்திறவுகோல், s. A false key, a picklock.

கள்ளத்தீன், s. Sweet-meat, cakes, &c., eaten by stealth instead of regular food, திருட்டுணவு.

கள்ளத்துறை, s. Ports where exports and imports are prohibited, ஆயத்துறைக்குமாறானதுறை.

கள்ளத்தோணி, s. A kind of dhoney, sailing to different places from Point Calimere, &c ; this species of boat is so called because formerly employed in robbing the pearl banks.

கள்ளநடத்தை, s. Illicit intercourse of the sexes.

கள்ளநீர், s. Morbid humor in the body preventing the healing of ulcers, &c., புண்ணிலவடியுநீர்.

கள்ளநேரம், s. Irregular seasons for doing things, seasons for illicit acts when detection may not occur. 2. A little before daylight, தாக்குநேரம்.

கள்ளப்பசி, s. Deceptive feelings of hunger.

கள்ளப்பாடம், s. Lessons omitted, slipped over, &c, being unlearnt, deceiving the master.

